www.tamilarangam.net

February 2011

| M | T | W | T | F | S | S |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | | | | | | |

« Jan

- **இன்றுவரை...**
-
- பதிவுகள் :**11,978**
  கருத்துக்கள் :**26,232**
  வகைகள் :**119**
  பார்த்தவர்கள் : 036529
-
-
- **தேசம்நெற்**

**தேசம்**

**--தேசம்நெற் ஆசிரியர் குழு**

**Feb**

**10**

# தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் எனது சாட்சியம் - பகுதி 1 : ஜெ ஜென்னி

≡ Category: கட்டுரைகள்/ஆய்வுகள், ஜென்னி ஜெ | ≅

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

ஜென்னி, கருணா என அறியப்பட்ட ஜெயச்சந்திரன் ரஜனி ஆகிய நான், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தில் 1987 ஆண்டு வரை போராளியாய் இருந்தேன். அதற்கு பின் இதுவரை பிரான்ஸில் மட்டுப்படுத்தப்பட்ட கலை, இலக்கிய, அரசியல் செயற்பாடுகளுடன் வாழ்கிறேன். தேசம்நெற் இணையத்தின் வரலாற்று உண்மைகளைத் தேடும் விடயத்தில் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க எனது சொந்த அடையாளத்துடன் இப்பதிவினை மேற்கொள்கிறேன்.

இதற்கு முன்னாக நிலா என்ற புனைப்பெயரில் வெளியான பதிவும் என்னுடையது என்பதனை இங்கு தெரிவித்துக் கொள்கிறேன். நினைவுப் பதிவுகளில் இருந்து - தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் தோற்றம்! - கழக வரலாற்றுக் குறிப்பு : நிலா (முன்னாள் கழகப் போராளி) நிலாவின் பதிவில் ஒரு சில பின்னூட்டங்களில் வைக்கப்பட்ட சந்தேகங்களுக்கு எனது சுயவிமர்சனம் - விமர்சனத்துடன் கூடிய என் பக்க நியாயங்களை வெளிக்கொணர்ந்தேன்.

பல்வேறு நெருக்குதல்கள், அச்சங்களுக்கும் மத்தியிலும், வரலாற்று உண்மைகள் மறைக்கப்படவோ திரிபுபடுத்தப்படவோ கூடாது என்ற நோக்கத்தில் எனது சொந்த அடையாளத்துடன் இப்பதிவை மேற்கொள்வது என்ற முடிவுக்கு வந்தேன். அதனால் இங்கு பின்னூட்டம் இடுபவர்கள் தங்கள் சுய அடையாளத்துடன் வருவது வரலாற்று உண்மைகளைத் தேடுவதற்கு அவசியம் என்று நினைக்கிறேன். தங்களின் சொந்த முகத்துடன் கழகத்தில் அவர்களுக்கு இருந்த பாத்திரங்களுடன் வந்தாலேயே தொடர்ந்து உண்மையைத் தேட முடியும். அப்படி வருபவர்களுடன் நானும் இத்தளத்தில் தொடர்ந்து மனம் திறந்து எதையும் விவாதிக்க முடியும். வரலாறு என்பது தனி ஒருவரால் எழுதப்பட முடியாது. ஒரே சம்பவம் பல்வேறு கோணங்களில் பார்க்கப்படலாம். எவ்வாறு ஒரு சம்பவத்தை பார்க்கிறோம், பதிவு செய்கிறோம் என்பதில் நாங்கள் சம்பந்தப்பட்ட அரசியலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. அதனால் எங்கள் சொந்த அடையாளத்தை மறைத்து புனைபெயரில் ஒரு வரலாற்றை பதிவு செய்யும் போது சம்பவம் மீதான எங்கள் அரசியலின் தாக்கம் மறைக்கப்படுகிறது. அது வரலாற்றுத் திரிபுக்கு இட்டுச் செல்லக்கூடும்.

நான் நிலா என்ற புனைப்பெயரில் வந்த போது எனது ஈஎன்டிஎல்எப் அரசியல் பின்னணி மறைக்கப்பட்டது. அதனால் தவறான ஊகங்களுக்கும் அது வழியை ஏற்படுத்தியது. அதனாலேயே நான் எனது சொந்த அடையாளத்தை வெளிப்படுத்துகின்றேன். அதனால் வரலாற்றை மதிப்பீடு செய்யும் ஒருவர் சரியான மதிப்பீட்டை மேற்கொள்ள இது உதவும்.

எனவே பல சவால்களை எதிர்பார்த்தும், கடந்த கால கசப்புணர்வுகளின் தடங்களில் இருந்தும் இந்த சுயவிமர்சனத்தை ஆரம்பிக்கின்றேன். தயவு செய்து தேச நிர்வாகமும் பின்னூட்டம் இடுபவர்களும் தங்கள் சொந்த அடையாளத்துடன் வருபவர்களை ஊக்குவிக்கும் முறையில் பதிவுகளை அனுமதிக்க வேண்டும். பதிவுகளை இட வேண்டும்.

**அரசியலுக்குள் எனது அறிமுகம்:**
எனது அரசியல் வாழ்வென்பது எனது பெற்றோரின் குடும்பம் சார்ந்த தமிழரசுக் கட்சி, கூட்டணி அரசியலுடன் ஒன்றறக் கலந்தது. எனது சிறுவயதிலேயே அ அமிர்தலிங்கம், அ மங்கையற்கரசி, ஆர் சம்பந்தர், தங்கத்துரை மற்றும் கூட்டணி தலைமைகள், அடுத்த இளைஞர் வட்டங்கள் காசி, வண்ணை, சேனாதி தொடர்ந்து சந்தியார், திருமலை அன்னலிங்கம் ஐயா (பின்னாள் ஈரோஸ் முக்கியஸ்தர்), திருமலை தங்க மகேந்திரன் ஆகியோருடன் உறவுகள் இருந்தது. தங்க மகேந்திரன் புலோலி வங்கிக் கொள்ளையில் சம்பந்தப்பட்டவர்களில் முக்கியஸ்தர். இவரால் அன்றைய காலகட்டத்தில் தான் புஸ்பராஜா, பிரான்சிஸ், வரதராஜப்பெருமாள், என விடுதலை உறவுகள் எங்கள் வீட்டுக்கு வந்து போயினர். எனது 14வது வயதிலேயே ஊர்மிளா, உமாமகேஸ்வரன், ரகுபதி, பாலசிறீதரன் போன்ற பலருடன் குடும்ப நட்பு ரீதியான அரசியல் உறவும் ஏற்பட்டது. எனது 19வது வயதிலேயே நேரடியாக சமூகவேலைத் திட்டம் அதனூடு அரசியல் என எனது பொது வாழ்வு இப்போது மூன்று சகாப்தத்தை தொட்டுவிட்டது.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

திருகோணமலையை பிறப்பிடமாக கொண்ட நான் 1979ல் காந்தீயத்தின் ஊடாகவும், திருமலையில் வைத்து சந்ததியாரின் தொடர்பாலும், அதன்பின் கழகத்தின் பணிகளில் ஈடுபட்டதின் நிமித்தம், 1983 ஐப்பசி 16ல் வீட்டிலிருந்து புறப்பட்டு முழுநேர கழக உறுப்பினரானேன். நான், செல்வன் என்ற கிருபாகரன் (இவர் அன்று திருமலை அரசியல் பொறுப்பாளர் - பின்னாளில் கழகத்தினால் படுகொலை செய்யப்பட்டவர்.) மற்றும் ஜெயகாந்தன், ரகு என்ற ராதாகிருஸ்ணன் (இருவரும் லண்டனில் வசிக்கின்றனர்.), பீலிக்ஸ் (கனடா) மற்றும் சில கழக இளைஞர்களுமாக செயல்பட்டோம். அப்போது 1984 மாசிப் பகுதியில் இலங்கை அரசால் தேடப்பட்டோம்.

**தலைமறைவு வாழ்வு:**
1983 மட்டக்களப்பு ஜெயில் உடைப்பில் ஈடுபட்டதைத் தொடர்ந்து, பார்த்தன் என்ற ஜெயச்சந்திரனும் அதனைத் தொடர்ந்து காந்தன் என்ற ஜான் மாஸ்ரரும் தலைமறைவாகி இந்தியா சென்று பயிற்சிகளிலும் கழக அலுவல்களிலும் ஈடுபட்டனர்.

நாங்கள் தேடப்பட்டபோது ஜெயகாந்தன், பீலிக்ஸ் உதவியால் நானும், ரகுவும், மூதூரில் தலைமறைவாகி இருந்தோம். ஆனால் ஜெயகாந்தனும் பீலிக்ஸ்ம் அன்றிரவே ராணுவத்தால் சுற்றிவளைக்கப்பட்டு பிடிபட்டனர். அத்தோடு ஒரு வாரத்திற்கு இடையில் திருமலையில், 81 கழகத் தோழர்கள் உட்பட சில ஆதரவான இளைஞர்களும் பொலிஸ் அதிபர் பெர்ணான்டோவின் தீவிர வேட்டையால் கைது செய்யப்பட்டனர். இதற்கு ஒருசில நாட்களுக்கு முன் செல்வன் அரசியல் விடயமாக யாழ் சென்றதால் கைதாகவில்லை.

நானும் ராதாவும் ஒரு பகல்பொழுது வித்தியாசத்தில் ஜெயகாந்தன், பீலிக்ஸால் மூதூரிற்கு அனுப்பப்பட்டோம். அங்கு ராதா என்னை ஒரு குடும்பத்துடன் பொறுப்பாக விட்டு விட்டு தான் மூதூர் ஊடாக மட்டக்களப்பை நோக்கிச் சென்று தலைமறைவானார். ராதா தனது கழகப் பணிகளில் தீவிரமாக செயற்பட்டு பின்நாளில் அம்பாறை மாவட்டப் பொறுப்பாளராக கழகத்தின் கடைசிக்காலம் மட்டும் செயற்பட்டார்.

ராதா மூதூரில் கடற்கரைச்சேனையில் உள்ள திருநாவுக்கரசு என்ற காந்தீய முழுநேரத் தொண்டரின் வீட்டிலேயே அவர்களின் குடும்பத்தினருடன் என்னை விட்டுச் சென்றார். திருநாவுக்கரசு கடைசிக்காலம் வரையில் கழகத்தில் செயற்பட்டவர். ராணுவத்தினாலும் புலிகளினாலும் தேடப்பட்டவர். அதனால் இந்தியாவிற்கு அகதிகளாக குடும்பத்தோடு இடம் பெயர்ந்து, இப்போதுவரை புழல் அகதிகள் முகாமில் வாழ்கின்றனர்.

கடற்கரைச்சேனையில் அன்றைய மூதூர் அரசியல் பொறுப்பாளரும் கடற்கரைச்சேனையைச் சேர்ந்த இளைஞருமான அகிலன் இன் தொடர்பு ஏற்பட்டது. (அகிலன், செல்வனுடன் கழகத்தால் படுகொலை செய்யப்பட்டவர்.) கிட்டத்தட்ட 20 நாட்கள் மூதூரில் தலைமறைவாக இருந்து, திருமலையில் பதட்டநிலை ஓரளவு தணிய, திருமலை ஊடாக அகிலனின் உதவியுடன் நான் யாழ் அனுப்பப்பட்டேன். அங்கு கழகத்தினருடன் இணைந்து கொண்டேன்.

**யாழில் எனது அரசியல் செயற்பாடுகள்:**
அக்காலகட்டத்தில் யாழ் பல்கலைக்கழகமே இயக்கங்களின் சந்திப்பு மையமாக இருந்து. அப்போது தள அரசியல் பொறுப்பாளராக இருந்த பாலன் என்ற சலீம், தள ராணுவப் பொறுப்பாளராக இருந்த பார்த்தன் மற்றும் அசோக், சத்தியமூர்த்தி, கிளிநொச்சி கண்ணன் உட்படப் பல கழகத்தவர்கள் பல்கலைக்கழக மட்டத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தனர். இவர்களுடன் நந்தா - அளவெட்டி, வனிதா - உரும்பிராய் (இவர்கள் இருவரும் தற்போது அவுஸ்திரேலியாவில் வாழ்கின்றனர்.) மற்றும் யசோதா - கொக்குவில், செல்வி (புலிகளால் கடத்தப்பட்டு காணாமல் போன ஒரு கவிஞை.) உட்பட்ட பல பெண்களும் பல்கலைக்கழகத்தில் கழகத்திற்காகச் செயற்பட்டு வந்தனர்.

இம்மகளிருடன் ஒரு சில நாட்கள் தங்கிய நிலையில், நானும் சில பெண்களும் பெண்களுக்கான ராணுவப் பயிற்சிக்கென பின்தளத்திற்கு போக கழகத்தால் ஒழுங்கு செய்யப்பட்டது.

**எனது காதலும் திருமணமும்:**
கழகத்தில் எமது அரசியல் செயற்பாடுகளுக்கு இடையே தனிமனித உணர்வுகளும் உறவுகளை உருவாக்கியது. நானும் பார்த்தனும் சில ஆண்டுகளுக்கு முன்பே ஒருவரை ஒருவர் விரும்பி இருந்தோம். எமது காதல் விடயம் மத்திய குழுவிற்கும் ஏற்கனவே

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

தெரிந்து, அவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக பார்த்தன் எனக்குச் சொல்லி இருந்தார். நிச்சயமற்ற எதிர்காலத்துடன், மீண்டும் நாம் இருவரும் எப்போ சந்திக்கப் போகின்றோமோ என்ற நிலையிலும், நாம் பதிவுத் திருமணம் செய்ய திடீரென முடிவெடுத்தோம். அரசியல் பதட்ட நிலையிலும், கைதுகள் மத்தியிலும் யாழ் நகரிலுள்ள எனது அம்மம்மா வீட்டில் வைத்து பதிவுத் திருமணம் மார்ச் 20ல் நடந்தது.

**வாழாமலேயே முடிவுக்கு வந்த மணவாழ்வு:**
1984 ஏப்ரல் 5ம் திகதி நானும் இன்னொரு தோழியும் பெண்களுக்கான இராணுவப் பயிற்சிக்காக பின்தளத்திற்கு அனுப்பப்பட்டோம். அதற்குச் சில நாட்களுக்கு முன்பாக 5 பெண்கள் பின்தளம் அனுப்பப்பட்டு இருந்தனர். ஆனாலும் பெண்களுக்கான ராணுவப் பயிற்சிக்கான ஆயத்தங்கள் பின்தளத்தில் பூர்த்தி செய்யப்படாத நிலையில், சில வாரங்கள் சென்னையில், கழகத்தின் குடும்ப உறவினர்கள் வீட்டில் தங்க வைக்கப்பட்டோம்.

அப்போது ஏப்ரல் 24ம் திகதி என்னை நிலைகுலைய வைத்த அந்த அதிர்ச்சிச் செய்தி வந்தது. மட்டக்களப்பில் பார்த்தன் உயிரிழந்த அந்தச் செய்தி எனக்கு அறிவிக்கப்பட்டது. எமது திருமண நாளான மார்ச் 20க்குப் பின் ஒருசில நாட்களில் பார்த்தன் தலைமையில், கிழக்கு மாகாண ராணுவப் பயிற்சி முடித்த கழகத் தோழர்கள், கிழக்கில் பரவலான தாக்குதல் ஒன்றிற்குப் போவதாகக் கூறி அவசரமாக விடைபெற்றனர். இதுவே பார்த்தனை நான் சந்தித்த கடைசி நிமிடங்கள். எமது திருமண நாளான அன்றும் 25ம் திகதியும் இருநாட்கள் மட்டுமே நான் பார்த்தனைச் சந்தித்து இருந்தேன். அதற்குப் பின் என்றுமே நாம் சந்திக்க முடியாது என்ற உண்மை மிக வேதனையாகவே இன்றும் உள்ளது.

பொலிஸ் நிலையத்தை தாக்குவதற்கு தகவல் சேகரிக்கச் சென்ற போது பார்த்தன் பொலிஸாரிடம் மாட்டிக்கொள்ள பிடிபடும் கடைசி நிமிடத்தில் செல்வன் தப்பித்து ஓடிவிட்டார். பிடிபட்ட பார்த்தன் பொலிஸ் நிலையத்தில் பொலிஸ்காரர் ஒருவரின் துப்பாக்கியைப் பறித்து தாக்குதல் நடத்த, பொலிசார் திருப்பித் தாக்கிய போது உயிரிழந்தார். மறுநாள் செல்வன் பொலிஸ் நிலையத்திற்கு துப்பரவு செய்பவரான வேடத்தில் சென்று பார்த்தனின் உடலை அடையாளம் கண்டு, மரணத்தை உறுதிப்படுத்தினார். இந்த செய்தியை செல்வனே ஒரிரு நாட்களில் சென்னையில் கழகத்தின் தலைமைப்பீடத்திற்கு கொண்டு வந்தார். இச்செய்தி 30ம் திகதி உறுதிசெய்த பின் மறுநாள் மே தினமான அன்று சென்னை உட்பட எல்லா முகாம்களிலும் பார்த்தனுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

சென்னைக்கு வந்த செல்வன் எனக்கும் முக்கிய தோழர்களான சந்ததியார், சுமதி என்ற பயஸ் மாஸ்ரர், சறோஜினி, திருமலை பாஸ்கரன் உட்படப் பலருக்கும், பார்த்தனுக்கு என்ன நடந்தது என்பதை விளக்கி, விபரித்து ஒரு அறிக்கையையும் சமர்ப்பித்தார். அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு அடுத்த நாளே செல்வன் சுமுகமாக நாடு திரும்பி விட்டார்.

**பின்தளத்தில் பயிற்சி:**
இதன் பின்னான ஒரு மாத காலத்தில் மகளிருக்கான உடனடி ராணுவப் பயிற்சியும் பின் இரு பிரிவாக தொலைத் தொடர்புப் பயிற்சியும் - மருத்துவ பயிற்சியும் வழங்கப்பட்டது. தொலைத் தொடர்பு பயிற்சிக்கு நான் உட்பட தோழி ராதா என்ற ஜீலி, துளசி என்ற ஜெயவாணி, மீரா (மட்டக்களப்பு), மிருணா (தற்போது லண்டனில் வாழ்கிறார்.) ஆகியோர் இணைக்கப்பட்டோம். ஜீலி 1983 பிற்பகுதியில் நாட்டில் தேடப்பட்டதால் தலைமறைவாகி பின்தளத்திற்கு வந்தவர்.

**தளமகளீர் அமைப்பு பொறுப்பாளர் நியமனம்:**
இப்பயிற்சி சிறப்பாக முடிந்து நாட்டில் பயிற்சி நிலையங்களை பொறுப்பெடுக்க இருந்த வேளையில் 1984 பிற்பகுதியில் காந்தன் என்ற ஜான் மாஸ்ரர் என்னைத் தொலைத் தொடர்பு பயிற்சி முகாமில் வந்து சந்தித்து, உடனடியாக நாட்டிற்கு போக ஆயத்தம் ஆகும்படி கூறினார். அங்கு தளமகளீர் அமைப்பு பொறுப்பை ஏற்குமாறும் குறிப்பிட்டு, அதிகாரபூர்வமான தனது கைப்பட எழுதிய கடிதத்தை எனக்குத் தந்தார். அதில் காந்தன் என்ற பெயரின் கீழே உப செயலதிபர், மகளீர் அமைப்புக்கான தொடர்பாளர், முகாம்களுக்கான நிர்வாக ஆலோசகர் என ஐந்து பதவித் தகமைகள் குறிப்பிட்டு இருந்தது. மற்றைய பொறுப்பு என்னவென்பது ஞாபகத்திற்கு வரவில்லை.

இந்த நியமனக் கடிதத்தை நான் பெற்றாலும் அதில் எனக்கு முழு உடன்பாடு இருக்கவில்லை. காரணம்:
1) மிக ஆர்வமாக எவ்வளவோ கஷ்டப்பட்டு, ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் சொந்த

இழப்புக்களை எல்லாம் மனதிற்குள் விழுங்கிக் கொண்டு தொலைத் தொடர்பு பயிற்சியை முடித்து அதற்கான தளத்தை பொறுப்பெடுக்கும் முதல் தகுதியில் இருந்த நான் அரசியல் வேலைக்குள் பிரவேசிக்க விரும்பவில்லை.
2) தொலைத் தொடர்பு பயிற்சியில் தனிமைப்படுத்தப்பட்டு இருந்த எமக்கு கழகத்திற்குள் என்ன நடக்கின்றதென முழுமையாக தெரியாவிட்டாலும், அரசல் புரசலாக கழகத்திற்குள் சந்ததியாரின் முரண்பாடு, அரசியல் - ராணுவப் பிரிவுகளுக்குள் உள்ள முரண்பாடுகள் என சில விடயங்கள் தெரிந்து இருந்தது.
3) நான் ஆரம்பத்திலேயே சந்ததியார் மூலமே நேரடியாக அரசியலுக்குள் கழகத்திற்குள் பிரிவேசித்ததால் (பார்த்தன் - ஜான் ஆகியோரின் நட்புக்கு முன்பே) இந்த முரண்பாடுகளிற்குள் முட்டி மோத விரும்பவில்லை.
4) மேலும் தொலைத் தொடர்பில் எமக்கு பொறுப்பாளர்களாக, ஆசிரியர்களாக இருந்தவர்களும் அரசியலில் ஈடுபாட்டைக் காட்டாததால் எனக்கு நேரடி அரசியலில் ஈடுபாடு இருக்கவில்லை.

ஜான் மாஸ்ரர் அன்று எனது நண்பராக இருந்தாலும் அதிகார அந்தஸ்டன் வந்து இருப்பதால் எனது விருப்பு வெறுப்புகளைத் தெளிவாக வெளிப்படுத்த முடியாத சூழலில், ஜான் மாஸ்ரர் தந்த நியமனக் கடிதத்தை ஏற்றுக் கொண்டேன். நான் உடனேயே செயலதிபரைச் சந்தித்து பேச வேண்டும் என்றபோது, "செயலதிபர் உட்பட்ட முக்கியஸ்தர்கள் நாட்டிற்குள் இறங்கி விட்டார்கள். நீங்கள் அவர்களை அங்கு சந்திக்கலாம். இனி அங்கு தான் எல்லோரும் நிரந்தர தளம் அமைக்க வேண்டும்" என்றார் ஜான் மாஸ்ரர். மேலும் என்னிடம் இருந்த சொந்த அடையாளங்களுக்குரிய ஆதாரங்கள் எல்லாவற்றையும் பாதுகாப்பிற்காக தரும்படியும் கேட்டுக் கொண்டார். எனது பதிவுத் திருமணம் அன்று எனது உறவினரால் வற்புறுத்தி ஞானம் "ஸ்டூடியோ'வில் எடுக்கப்பட்ட புகைப்படத்தையும் பார்த்தனால் அன்பளிப்புச் செய்யப்பட்ட எனது டயரியும் ஜான் மாஸ்ரரிடம் கையளித்தேன். இப்புகைப்படத்தை பார்த்தன் இறுதிவரை பார்க்கவேயில்லை.

நாட்டில் தேடப்பட்ட நபராக நான் இருந்ததால் மிக கவனமாக செயற்படும் படியும், முடிந்த வரையில் திருகோணமலைக்கு உட்பட்ட பிரதேசங்களை தவிர்க்கும் படியும் கூறி ஜான் மாஸ்ரர் என்னை எச்சரித்து வழியனுப்பினார்.

**மீண்டும் யாழில் எனது கழகச் செயற்பாடு:**
எனது சொந்த விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாலும் தளத்தில் கழகம் இறங்கி செயற்படப் போகின்றது என்ற சந்தோஷத்தில் நான் பொறுப்பை மேற்கொண்டு நாட்டுக்குச் சென்றேன். நான் சென்ற படகு மாதகலில் இறங்கவும், கந்தசாமி குழுவினரால் மேற்கொள்ளப்பட்ட சுழிபுரம் ஆறு கொலையும் அதனைத் தொடர்ந்த அரசியல் பதட்ட நிலையும், செயலதிபர், கந்தசாமி உட்பட்ட நபர்களை தளத்திற்கு போன வேகத்திலேயே பின் தளத்திற்கு திரும்ப வைத்தது. எனவே நான் இவர்களை தளத்தில் சந்திக்கவேயில்லை. (இக் கொலையை கழகம் தான் செய்தது என்று அன்று நான் அறிந்து இருக்கவில்லை.)

அப்போது அங்கு குமரன் என்ற பொன்னுத்துரை தளப்பொறுப்பாளராக இருந்ததால் அவரிடம் எனது நியமனத்தைக் கொடுத்து எனது பொறுப்பை ஏற்றுக்கொண்டேன். இதன்பின் குமரன் மூலம் உரும்பிராய் குமார் மற்றும் எனக்கு முன்பே தெரிந்த நந்தா, வனிதா, செல்வி ஆகியோர் உட்பட்ட அன்று தளத்தில் தீவிரமாக அரசியல் வேலை செய்தவர்களுடன் இணைக்கப்பட்டேன்.

**எனது தளமகளீர் அமைப்பு பொறுப்பு:**
நாட்டில் அரசியல் தளத்தில் ஒன்பது மாவட்டங்களிலும் அரசியல், ராணுவம் எனப் பிரிவு பிரிவாக நிர்வாகக் கட்டமைப்புக்கள் செயற்பட்டன. மகளிரும் எல்லா மாவட்டத்திலும் அரசியல் அமைப்பைச் சார்ந்தும், சில இடத்தில் தனித்தும் செயற்பட்டனர். எனவே நான் முதற்கட்டமாக நந்தா, வனிதா, செல்வி, யசோ ஆகியோருடன் கலந்து ஆலோசித்து செயற்பட்டேன். மேலும் தளப் பொறுப்பாளர் குமரன், அசோக், பெரிய முரளி மற்றும் யாழ் மாவட்டப் பொறுப்பாளர் நேசன் ஆகியோருடனும் பேசி மகளீர் அமைப்பை முடிந்த வரை தனித்துவமான அரசியல் அமைப்பு போல் உருவாக்க எண்ணினேன். மகளீர் அமைப்பு அரசியல் நிர்வாகக் கட்டமைப்பாக ஒன்பது மாவட்டத்திலும் பிற்காலத்தில் பத்தாவது மாவட்டமாக புத்தளத்திலும் மிக வேகமாகச் செயற்பட்டது. இதில் ஆயிரக்கணக்கான மகளீர் மாவட்டத்திற்கு மாவட்டம் செயற்பட்டனர். இவர்கள் வீட்டின் அனுமதியுடனோ அல்லது வீட்டைவிட்டுப் புறப்பட்டு முழுநேரமாக செயற்பட்டனர். இதில் குறிப்பிடத்தக்க


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

பல்கலைக்கழக மாணவிகளும் இணைந்து கொண்டார்.

இவ்வாறு இணைந்து கொண்ட பல்கலைக்கழக மாணவிகளில் குறிப்பிடத்தக்கவர் சத்யா என்ற முதலாம் ஆண்டு மருத்துவக்கல்லூரி மாணவி. (தற்போது லண்டனில் மருத்துவ கலாநிதியாக உள்ளார் என அறிகிறேன்.) பதினேழு வயதேயான மிக சூட்டிகையான துணிச்சலான பெண் இவர். இவர் எனக்கு நந்தா, வனிதா மூலம் அறிமுகப்படுத்தப்பட்டார் என நினைக்கின்றேன். இவரின் சில வேலைத்திட்டம் பிரமிக்க வைக்கக் கூடியது. அன்றைய காலத்தில் குருநகர் ராணுவ முகாம், தெல்லிப்பளை - கட்டுவன் ராணுவ முகாம் என்பன யாராலும் உள் நுழைய முடியாத பிரதேசமாக இருக்கும். ஆனாலும் அந்த முகாம்களின் வரை படங்களை தனது சாதுரியத்தால் வேறு தனிப்பட்ட நபர்கள் மூலம் பெற்றுக் கொண்டு வந்தார்.

நான் தொலைத் தொடர்பு பயிற்சி முடித்து வந்ததாலும், மகளீர் அரசியலில், அதன் கட்டமைப்புக்களில் தீவிரமாக ஈடுபட்டுக் கொண்டு இருந்ததால், இப்படி ராணுவ தந்திரோபாய வேலைகளில் மகளீரை ஈடுபடுத்துவது பற்றி சிந்திக்கவில்லை. அதில் ரிஸ்க் எடுக்கவும் விரும்பவில்லை. ஆயினும் சத்யா தான் இப்படியான வேலைகளை தன்னால் தொடர்ந்து செய்ய முடியும் என்று ஆர்வத்துடன் சொன்னதற்கு இணங்க, பின்னாளில் தள ராணுவப் பொறுப்பாளர் மெண்டிஸ்க்கு சத்யாவை அறிமுகம் செய்து வைத்தேன். மேலும் எக் காரணம் கொண்டும் சத்தியாவின் பாதுகாப்பிற்கோ கல்விக்கோ பாதகம் வராத விதத்தில் செயற்படும்படி இருவருக்கும் கூறியே தொடர்பை ஏற்படுத்திக் கொடுத்தேன்.

மேலும் மகளிருக்குள் நான் மட்டும் எந்த முடிவையும் எடுக்காமல் அறியப்பட்ட எங்கள் மத்தியில் ஒரு குழுவை அமைத்தோம். இதில் செல்வி, நந்தா, வனிதா, சத்யா, பின்னர் இணைந்துகொண்ட ரீட்டா என்போர் முக்கியமானவர்கள். ‘சத்யாவை இராணுவ தந்திரோபாய நடவடிக்கைகளுக்குப் பயப்படுத்த மெண்டிஸ்க்கு அறிமுகம் செய்வது என்ற முடிவு’ உட்பட எல்லாவற்றையும் பேசியே ஒரு முடிவெடுப்போம். அதே போல் அனைத்து மாவட்டங்களின் நிர்வாக முடிவும் இந்த ஆறு பேரின் முடிவுடன் தான் செயற்படுத்தப்படும். எனவே இதன் அடிப்படையில்
1) யாழ் மாவட்ட பொறுப்பாளர் வனிதா (அவுஸ்திரேலியா)
2) முல்லை மாவட்ட பொறுப்பாளர் இந்து (பிரான்ஸ்)
3) கிளிநொச்சி மாவட்ட பொறுப்பாளர் (ஞாபகம் இல்லை.)
4) வவுனியா மாவட்ட பொறுப்பாளர் உமா (வவுனியாவைச் சேர்ந்தவர்.)
5) மட்டக்களப்பு மாவட்ட பொறுப்பாளர் யசோ (2010ல் மட்டக்களப்பில் இயற்கை மரணம் எயதினார். மரணம் வரையிலும் நாட்டில் சமூகப் பணிகளில் ஈடுபட்டு இருந்தார்.)
6) திருகோணமலை மாவட்ட பொறுப்பாளர் விஜி (இவர் குருநகரைச் சேர்ந்தவர். சி.சி (மத்திய குழு) பெரிய முரளிக்கு நன்கு பழக்கமானவர்.)
7) மூதூர் மாவட்ட பொறுப்பாளர் சக்தி (இவர் குப்பிளானைச் சேர்ந்தவர். தற்போது அமெரிக்காவில் இருப்பதாக அறிகின்றேன்.)
😎 அம்பாறை மாவட்ட பொறுப்பாளர் விஜி (இவர் கல்முனையைச் சேர்ந்தவர்.)
9) மன்னார் மாவட்ட பொறுப்பாளார் (பெயர் ஞாபகம் வரவில்லை.)
10) புத்தள மாவட்ட பொறுப்பாளர் உமா (இவர் உடப்பு பிரதேசத்தை சேர்ந்தவர்.)
இவ்வாறாக பல மாவட்டங்களிலும், கிராமங்களில் - கிராம சேவைப்பிரிவு, ஜி.எஸ் பிரிவு, ஏ.ஜி.ஏ பிரிவு என நிர்வாகக் கட்டமைப்பை வரையறுத்து மகளீரமைப்பு செயற்பட்டது.

இவற்றிற்கான வேலைத் திட்டங்களுக்கான அறிக்கைகள் ஒவ்வொரு மாவட்டத்தில் இருந்தும் அந்தந்த பொறுப்பாளர்களால் தயாரிக்கப்பட்டு மாதாந்தம் கூடப்படும் தளமகளீர் கூட்டத்தில் இப் பொறுப்பாளர்களால் அறிக்கை சமர்பிக்கப்பட்டு குறைநிறைகள் விவாதிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டது.

**மகளீர் அமைப்பின் தனித்துவமான செயற்பாடு:**
இந்த வேலைத் திட்டங்கள் கூடியவரை மகளீருக்கான தனித்துவமாக செயற்பட்டது. சில இடங்களில் அந்தந்த மாவட்டங்களுக்கு உரிய கைத்தொழில், பாலர் பாடசாலை என சமூக வேலைத் திட்டங்களிலும் ஈடுபட்டது. இதற்கான உதவியாக, அனுசரணையாக, ஆலோசனையாக அந்தந்த மாவட்ட கழக அரசியல் பொறுப்பாளர்கள், தோழர்கள் சில இடங்களில் ராணுவப் பொறுப்பாளர்களும் இருந்தனர். யாழ் மாவட்ட பொறுப்பாளர் நேசனும் உரும்பிராய் குமார், ராசா (இவர்கள் கனடாவில் இருப்பதாக அறிகின்றேன்.), தீவுப்பகுதி காந்தி உட்பட்ட பல தோழர்களும் இதில் குறிப்பிடத்தக்கவர்கள். கிளிநொச்சி மாவட்ட பொறுப்பாளர் கிளி மாஸ்ரர் (தற்போது பிரான்ஸில் இருக்கின்றார்.) மனோ மாஸ்ரர் ஆகிய

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

இந்த இரு தோழர்களினதும் ஆலோசனைகள், குடும்பமாகவே அவர்கள் மகளிருக்கு செய்த உதவிகள், உறைவிடங்கள், வரலாற்றில் மறக்க முடியாது. மனோ மாஸ்ரர் பின்னாளில் ஈ.என்.டி.எல்.எப் உடன் இணைந்து மாகாணசபையில் முக்கியஸ்தராக இருந்தார். பின் பெங்களூர் அகதிகள் பாடசாலையின் நிர்வாகியாகவும் இருந்து சில வருடங்களுக்கு முன் நாட்டிற்குத் திரும்பிய நேரம் சொந்த மருமகனான புலியால் கடத்தப்பட்டு இதுவரை திரும்பவில்லை.

**மகளீர் இராணுவக் கட்டமைப்பை நோக்கி:**
இப்படியாக சக தோழர்கள், நட்புகளுடன் மகளீர் அரசியல் நகர்ந்தது. இந்த காலகட்டங்களில் ஏனைய இயக்கங்களில் மகளீர் ராணுவ கட்டமைப்பு உருவாகியதில் கழகத்திற்கு உள்ளும் மகளிரிடையே ராணுவப் பயிற்சிக்கான அழுத்தம் எல்லா மாவட்டங்களிலும் இருந்து வந்தது. ஏற்கனவே பல்லாயிரக் கணக்கான ஆண் தோழர்களையே பயிற்சி முடித்த பின் அடுத்த கட்டம் நோக்கி நகர்த்த முடியாத அளவுக்கு கழகத்தின் பின்தள முரண்பாடுகள் காணப்பட்டது. தளம், பின்தளத்தில் ஏற்பட்டுக் கொண்டு இருக்கும் ஈடாட்டத்தின் மத்தியில், மகளிர் இராணுவப் பயிற்சி அவசியமா? என்ற கேள்வி எனக்குள் எழுந்தாலும், அநேக மகளீரின் அழுத்தம் எனக்கு சிக்கலை ஏற்படுத்தியது. எனினும் இதுபற்றி ஆராய வேண்டிய தேவை எனக்கு ஏற்பட்டது.

(தொடரும்.)

***நட்புடன் தேசம்நெற் வாசகர்கள் கருத்தாளர்களுக்கு,***

*எனக்குத் தெரிந்த அல்லது நான் சம்பந்தப்பட்ட அத்தனை சம்பவங்களையும் இங்கு பதிவிடுவது என்பது என்பது இயலாத விடயம். அதனால் அவற்றை திட்டமிட்டு தவிர்க்கிறேன் என்ற முடிவுக்கு யாரும் வரவேண்டிய அவசியம் இல்லை. நீங்கள் குறிப்பிட்ட சம்பவம் பற்றி பின்னூட்டமாகவோ கட்டுரையாகவோ குறிப்பிட்டால் எனது நினைவில் இருந்து அவற்றைக் கொண்டுவர முயற்சிப்பேன். எனது பதிவு தேசம்நெற் இன் உண்மையைத் தேடும் முயற்சிக்கு மட்டுமல்ல நானும் உண்மைகளை அறிய விரும்புகின்றேன். அதற்கு உங்கள் ஆக்கபூர்வமான பதிவுகளை எதிர்பார்க்கிறேன்.*

*மேலும் என்னுடன் நேரடியாகத் தொடர்புகொள்ள விரும்புபவர்கள் கீழுள்ள மின் அஞ்சலில் தொடர்புகொள்ள முடியும்.*

*jenney@hotmail.fr*

***நட்புடன் ஜெ ஜென்னி.***

**தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் - வரலாற்றுக் குறிப்புகள்**
**முன்னைய பதிவுகளுக்கு:**

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் எனது சாட்சியம் - பகுதி 1 : ஜெ ஜென்னி

எழுத்தில் வல்லவன் எழுதுவது வரலாறு அல்ல! கண்ணாடிச் சந்திரன் உண்மையைத் தேட வேண்டும்! - கழக வரலாற்றுக் குறிப்பு: ராம் (தேசம்நெற் கருத்தாளர்)

பேராதனை கம்பஸில இருந்து ரொறன்ரோ - புளொட் இறக்கம்! தீப்பொறி இறக்கம்! மணியண்ணை ரைட் : பொறிமகன்

புலிகளின் கண்ணாடி விம்பமே புலிகளை வென்ற அரசு. - கேணல் கிட்டு மீதான கைக்குண்டுத் தாக்குதலும் அதன் எதிர்வினைகளும் : த ஜெயபாலன்

நினைவுப் பதிவுகளில் இருந்து - தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் தோற்றம்! : நிலா (முன்னாள் கழகப் போராளி)

தமிழீழ மக்கள் விடுதலை கழகம் - கடந்து வந்த தடங்கள் - பகுதி (2)

தமிழீழ மக்கள் விடுதலை கழகம் - கடந்து வந்த தடங்கள் - பகுதி (1)


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

« Jaffna University: A Poor Case for Privatisation by SB : John Ratnathurai, Jaffna | Home | "1977 இல் தமிழ்ஈழம் 18 ஆசனங்கள், 2004 இல் ஏகப்பிரதிநிதித்துவம் 22 ஆசனங்கள், 2009 இல் ஐக்கியம் 14 ஆசனங்கள், 2011 உள்ளூராட்சித் தேர்தலில்?" அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா »

**Related posts:**

- Will be added soon here...
-

**உங்கள் கருத்து**

This entry was posted on Thursday, February 10th, 2011 at 1:02 pm and is filed under கட்டுரைகள்/ஆய்வுகள், ஜென்னி ஜெ. You can follow any responses to this entry through the RSS 2.0 feed. You can leave a response, or trackback from your own site.

**26 Comments so far**

1. T Sothilingam on February 10, 2011 1:22 pm

   ஜென்னியின் அரசியல் விமர்சனத்திற்கு, அரசியல் முன்மாதிரிக்கு நன்றிகள்.

2. ajeevan on February 10, 2011 3:17 pm

   ஜென்னியின் எழுத்துக்கள் தொடரட்டும்.......... நான் ஜென்னியை முதன் முதலாக இலங்கையில் வைத்தே சந்தித்தேன். ஜென்னியின் தொடரை திசை திருப்பாது எழுத, வழி விட்டு வாசிக்க ஆர்வமாக உள்ளேன். பாராட்டுகள் முகம் காட்டியமைக்கு........

3. பல்லி on February 10, 2011 10:26 pm

   ஆகா இப்போதுதான் மக்கள் விடுதலை கலகம் கழகமாக மாறி செயல்படுகிறது; பொறுப்பாளர்; அரசியலாளர்; மகளீர்; பி எல் ஒ; மானவர் பேரவை; மத்தியகுழு; உடந்த தீப்பொப்றி என எல்லாரும் தமது குப்பையை இங்கு கொட்டுவதால் உன்மையில் கழகம் துப்பரவாக வாய்ப்புகள் அதிகம்தான், ஆனா யாராக இருந்தாலும் உன்மையை எழுதுங்கள், ஜென்னி தனது சுய விமர்சனத்தில் இருப்பதால் இப்போதைக்கு எனக்கு இங்கு வேலை இல்லை, இருப்பினும் நான் தேச நிர்வாகத்துடன் தொடர்புடந்தான் உள்ளேன், ஓடியதாக யாரும் நினைக்க வேண்டாம்; முடிந்தவரை நானும் தகவல் தர முயல்கிறேன், எதுக்கும் ஒரு பெண்ணாக இருந்தும் சுய விமர்சனத்துக்கு முன்வந்ததுக்கு தேசத்தின் வாசகனாய் நன்றிகள், இதை பல முன்னாள் கழக புத்த பிக்குகள் பின்பற்றலாம்;
   தொடரும் பல்லி;;;;

4. n.ravi on February 10, 2011 11:09 pm

   ஜென்னி. பீலிக்ஸ் என்பவர் யாழ்ப்பாணத்தில் இருந்து படித்தவரா?

5. vetrichelvan on February 11, 2011 3:58 am

   தோழர் ஜென்னி மிக மிக அருமையாக பிளாட்டின் வரலாறுகளை எழுத தொடங்கி விட்டார். ஒரு மிக பெரிய ஆலமரமாய் இருந்த கழகம் விழ்ந்த வரலாறு, இனி வரும் காலங்களில் விடுதலை இயக்கங்களுக்கு ஒரு பாடமாய் இருக்கட்டும்.

6. s.s.ganendran on February 12, 2011 4:58 pm

   ஜென்னியின் முகத்திறப்பிற்கு மனதார்ந்த நன்றிகள். தற்பொழுது எழுதப்பட்டுள்ளவைகளில் ஜென்னியின் மனம் திறந்த விமர்சனம் பெருமளவில் உண்மையாக இருக்கின்றபோதிலும் சிலவிடயங்களை தவிர்த்துள்ளார். அதேவேளை கந்தசாமி குழுவெனத் தெரிவித்துள்ள ஜென்னி அதே கந்ததசாமி (சங்கிலி)யுடன் தோழமை உணர்வுடன் மிகநெருக்கமான தொடர்பில் இருந்தவர். கழகத்தின் வீழ்ச்சியின் இறுதிக்காலங்களில் கந்தரின் உத்தரவிலேயே சந்திரகாசனின்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

அலுவலகத்தில் உளவுவேலைகள் பார்ப்பதற்காக சம்பளத்திற்கு வேலை பார்க்கும் ஒருவராக அனுப்பப்பட்டவர்.
ஜென்னி நீங்கள் தொடர்ந்து எழுதுங்கள் உங்களின் விமர்சன முற்றுக்குப் பின்னர் சிறந்த ஒரு பதிலை என்னாலும் தரமுடியும் என நினைக்கின்றேன்.

7. j.jenney on February 13, 2011 2:15 am

கனேந்திரன் வணக்கம்!
நன்றி உங்கள் வரவேற்பிற்கு!
நாம் இருவரும் ஒருவரையொருவர் நன்கு தெரிந்தவர்கள்தான் என்பதுவும் நன்கு தெரிந்ததே! உங்களைப்போன்ற எத்தனையோ ஆயிரம் பேரின் உறவுகளை- நட்புகளை- தோழமைகளை சம்பாதித்தும் சந்தித்தும் கடந்தும் வந்தவள் நான் என்பது உங்களுக்கு தெரிந்ததே!
எனவே நான் சுயவிமர்சனம் என்ற அடிப்படையில் கடந்த கால எம்மவர்களின் வரலாற்றையும் அதன் வழிமுறைகளையும் வெளிப்படுத்தும் போது கடந்து வந்த பாதையின் எந்த பக்கத்தையும் மறைக்க முடியாது- மறைக்கக் கூடாதென்ற நிலையில் தான் பல சவால்களையும் எதிர்கொண்டு இந்த விசப்பரிட்சையில் இறங்கியுள்ளேன். ஆயினும் நீங்கள் கேட்கும் கேள்விகளுக்கு உட்பட்டவற்றிற்கான அனைத்து விபரங்களையும் அனைத்து தரவுகளையும் தேசம் இணையதளத்திற்கு என்னால் முடிந்தளவு பெரியதொரு ஆவணமாக ஏற்கனவே கொடுத்துள்ளேன். ஆயினும் ஒரே கட்டுரையில் இதனை கொண்டு வர முடியாதாகையால் சில பகுதிகளாக பிரித்து வெளியிட வேண்டிய நிலையில் தேசம் நிர்வாகம் செயற்படுகின்றது. எனவே ஆரம்பம் முதல் எனது இந்நிலை வரையான அரசியல் சமூக செயற்பாடுகளும் என்னை நோக்கியுள்ள அத்தனை கேள்விகள் -சந்தேகங்களுக்கான ஆதாரத்துடன் கூடிய பதில்கள் -தெளிவுகளுடன் என்னை வெளிப்படுத்தியுள்ளேன். இதில் நீங்கள் குறிப்பிட்ட விடயங்களுக்கான விளக்கங்களும் தற்போது தேசம் நிர்வாகத்தின் கைகளில் உள்ளது. எனவே அவர்கள் பகுதிகளாக (இடப்பற்றாக்குறை காரணமாக) வெளியிடும் பதிவுகளிற்காக சிறிது பொறுத்திருங்கள். உங்கள் சந்தேகங்கள் தீர்க்கப்படும்.

நீங்கள் குறிப்பிடும் காலப்பகுதியில் நீங்களும் நாமும் ஒரே தளத்தில் தான் இருந்துள்ளோம் நீங்கள் சென்னையில் படித்துக் கொண்டு பதினேழு வயதில் சென்னை கழக மாணவர் அமைப்பின் தொடர்பில் வந்துள்ள போது நாம் கழகத்தின் பல கட்டங்களைத்தாண்டி கழகத்தின் கடைசி பகுதிகளில்(சென்னையில்) நின்றிருந்த காலம். எனவே உங்கள் சந்தேகங்களிற்கான பதிலும் அதிகமாக ஆனால் மிக தெளிவாக கட்டுரையின் கடைசிப்பகுதியில் வரும் என நினைக்கின்றேன். தயவு செய்து பொறுத்திருந்து பாருங்கள். உங்கள் தேடலின் ஆர்வத்திற்கு நன்றிகள்!

8. j.jenney on February 13, 2011 4:12 am

ரவி வணக்கம்!
நீங்கள் தேடும் பீலிக்ஸ். ஞானப்பிரகாசம் (அநுரா)என்பவர் திருமலையைச் சேர்ந்தவர். நீங்கள் குறிப்பிட்டபடி யாழ்ப்பாணத்தில் 27, மத்தியுஸ் வீதி என்ற அவரின் அம்மம்மா வீட்டில் இருந்து சிறிது காலம் படித்தவர் தான். இவர் எனது பெரிய தாயாரின் மூத்த ஆண் மகனும் கூட. இந்த எனது வரலாற்று பதிவு ஏற்கனவே மிக நீண்டதால் பல விடயங்களைத் தொட்டுச் செல்லத்தான் முடிந்தது. ஆயினும் உங்களைப் போன்ற தேடல் உள்ளவர்கள் அல்லது விடயம் அறிந்தவர்கள் இதில் ஆர்வம் உள்ளபோது நான் பின்னோட்டத்தினுடாகவும் சிலவற்றை வெளிப்படுத்த தேவையுள்ளது. ஏனெனில் போராட்டத்திற்கு வந்த எமது இளைஞர்கள் அதுவும் கழகத்திற்குள் உள்வாங்கப்பட்ட இளைஞர்கள் எத்தனையோ ஆயிரம் பேர் எவ்வளவு எதிர்பார்ப்புக்களோடு, எத்தனை எத்தனை அர்ப்பணிப்புக்களோடு வந்துள்ளனர் என்று எமது ஆவணப்படுத்தல்களில் பதிவாக வேண்டும். அதிலும் ரவி என்று எங்கோ நீங்கள் இருந்து கொண்டு யாழ்ப்பாணத்தில் சிறிது காலமே படிக்க வந்த பிலீக்ஸை அடையாளம் கண்டுள்ளீர்கள் என்பது இந்த இணையதள நெட் வேர்க் கிற்கு கிடைத்த வெற்றியாகத் தான் நான் பார்க்கின்றேன்.

பீலிக்ஸ் என்னை விட இரு வயது இளைய சகோதர முறையானவரானாலும், இவரது குடும்பப் பின்னணியின் காரணமாக 1983 நடுப்பகுதிவரை எந்த அரசியலிலும்

ஈடுபாடுகாட்டாதவர். ஏனெனில் ஒரு சராசரி வறுமைக்கோட்டை அண்டிய குடும்பத்தில் ஒன்பது பிள்ளைகளில் மூத்த ஆண்மகனாக இருந்து தனது மூத்த சகோதரி உட்பட்ட இளைய ஏனையோருக்குமாக வாழ்க்கைச் சுமையை ஏற்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருந்தார். எனவே ஏழைகளின் மூலதனமே கல்வி என்ற நிலையில் சிறுவயதுமுதலே பெற்றோரினது ஊக்கத்தாலும் தனது முயற்சியாலும் கல்வி ஒன்றே குறிக்கோளாக இருந்து அதன்படி புலமைப்பரிசில் உதவிப்பணத்துடன் மிக கஸ்டப்பட்டு படித்து வந்தார். தந்தையின் நேவி(பியுன்) சம்பளம் இப் பெரும் குடும்பத்திற்கு போதாமையால் தாயார் கடையப்பம் செய்து கொடுக்க தந்தையும் மகனும் இவற்றை கொடுப்பவர்களுக்கு கொடுத்து விட்டே பாடசாலைக்கும் வேலைக்கும் போவார்கள் இப்படியான பொறுப்பான பீலிக்ஸ் எம் வீட்டு அரசியல் சூழலில் இம்மியளவும் அக்கறை காட்டாதவர். அவரின் மூத்த சகோதரி காந்தீயத்தில் எம்முடன் ஓடித்திரிந்து சேவை செய்தபோதும் அதுபற்றி எந்த அக்கறையும் காட்டதவர். ஆனால் பார்த்தன் உட்பட்ட எல்லா விடயங்களையும் மேலோட்டமாக அறிந்தவர். ஆயினும் தொடர்ந்தும் புலமைப்பரிசில் உதவிப்பணத்தில் தொடர்ந்து படிப்பதற்காக விளக்கு வெளிச்சத்தில் இரவுபகலாக ஒரு மருத்துவராக வரவேண்டும் என்ற வெறியுடன் படிப்பார். இதனையுணர்ந்த தாயாரும் தனது மகனை பல்கலைக்கழகத்தை நோக்கி செல்ல யாழ்நகரில் விட்டு ஏ.எல் பாடங்களை படிக்க ஒத்தாசை செய்வதற்காக இந்த மகனிற்காகபணம் உழைக்க தனது 45 வயதைக் கடந்த நிலையிலும் மத்திய கிழக்கு நாடு ஒன்றிற்கு வேலைக்குச் சென்றிருந்தார். இந் நிலையிலேயே அவரின் படிப்பு யாழ்நகரில் தொடர்ந்தது. இங்கு தான் எங்கோ கழக இயக்கத் தொடர்புகளும் இவரிற்கு கிடைத்ததென நினைக்கின்றேன். அந்நேரம் பார்த்தன் மட்டக்களப்பு ஜெயில் பிரேக்கின் பின் யாழ்ப்பாணத்தில் நின்றிருந்த நேரம். கழகத்தின் அரசியல் வகுப்புக்கள் பாசறைகள் என தீவிரமாக செயற்பட்ட நேரம்.தோழர் சலீம், சத்தியமூர்த்தி, கொக்குசிவா, தோழர் தங்கராசா போன்றோரும் தீவிரமான அரசியலில் வகுப்புக்களை நடத்திய நேரம். இந் நேரத்தில் தான் பீலிக்ஸ் தாய் தந்தையர் குடும்பம் படிப்பு அவர்கள் எல்லோரின் ஒரே கனவு எல்லாவற்றையும் ஒரு நொடியில் தொலைத்து விட்டு எதிர்பாராத விதத்தில் அரசியலில் தீவிரமாகியுள்ளார். எனக்கு இவரின் இந்த ஆரம்பம் தெரியாவிட்டாலும் பின் தெரியவரும் போது இவரையே நம்பியிருந்த பத்திற்கும் மேற்பட்ட குடும்ப உறவுகள் அதன் எதிர்காலத்தின் வெறுமை எனது கண்ணில் தெரிந்தாலும் சுயநலத்துடன் எதையும் தடுக்கும் நிலையில் நான் இல்லை எனவே பிற்காலத்தில் நானும் வீட்டை துறந்து செயற்படும் போது இந்த பெரிய தாயார் வீடுதான் எமக்கும் எம் இளைஞர்களுக்கெல்லாம் உறைவிடமானது. பெரிய தாயாருக்கு இது தெரிந்தால் ஏற்கனவே நோயாளியான அவருக்கு ஏதும் ஆபத்து வருமென எல்லோரும் சேர்ந்து வெளியே இருந்த அவருக்கு எல்லாவற்றையும் மறைத்தோம். போதாக்குறைக்கு இவ்வளவு தீவிரமாக செயற்படுவதால் பீலிக்ஸ் தனக்கு ஏதும் நடந்தால் அல்லது பயிற்சி என்று இந்தியா போனாலும் தாயாருக்கு இது தெரியாவண்ணம் பல பேப்பரில் திகதியிடப்படாத சிறிய கடித குறிப்புக்களை எழுதி கையெழுத்திட்டு மூத்த சகோதரியிடம் கொடுத்து வைத்தோம். நாளை ஏதும் தனக்கு நடந்தால் அந்த பாசமான தாயாருக்கு இந்த கடிதத்தை கிடைக்கச் செய்வதற்காக. இவற்றையெல்லாம் வீட்டில் பாத்துக்கொண்டிருந்த பீலிக்ஸின் தந்தையின் துயரமும், ஏமாற்றமும் சொல்லமுடியாத சோகங்கள். இந்த சூழலில் தான் நான் இப் பதிவின் முற்பகுதியில் குறிப்பிட்ட செல்வன், ராதா, ஜெயகாந்தன் போன்ற இளைஞர்களுடன் எமது அரசியல் வேலைத்திட்டம் அமர்களமாக ஆனால் அதுவே பல உறவுகளை அநாதையாக்கிய, ஏமாளிகளாக்கிய, மொத்தத்தில் எம்மையே நாம் தொலைத்த வரலாறாகியது.

ஏனெனில் இந்த அரசியல் நடவடிக்கையில் ராணுவத்தில் தப்பிய நாம் தப்ப, அல்லது இவற்றால் தப்பி அதே உட்படுகொலைகளுக்கும் சகோதர படுகொலைகளுக்கும் இரையான செல்வன் அகிலன் போன்ற நூற்றுக்கணக்கானோர் ஒருபுறம் மறுபக்கத்தில் பீலிக்ஸ், ஜெயகாந்தன் போன்ற எம் இளைஞர்கள் ராணுவத்தின் பிடிகளில் சிக்கி பூசா, வெலிக்கடை ராணுவ முகாம்களை நிரப்பிக் கொண்டிருந்தனர். இதில் சலீம், சத்தியமூர்த்தி, கொக்குசிவா போன்ற பல இளைஞர்களும் மற்றைய இயக்கங்களில் பிடிபட்டதுமான ஆயிரக்கணக்கான (இதில் தேசம் நிர்வாகத்தில் உள்ள சோதிலிங்கமும் ஒருவர் என நினைக்கின்றேன் தயவு செய்து இதனை உறுதிப்படுத்தி இவர் போன்றோர் தங்கள் பதிவுகளை இதில் வெளியிடுங்கள்) எமது சகோதரரை சிறைக்கதவுகளுக்கு பின்னாலும் வருடக்கணக்கில் காவு கொடுத்தோம் இந்த போராட்டத்தில். இந்த இந்திய-

இலங்கை ஒப்பந்தம் தான் இந்த இளைஞர்களையெல்லாம் தமது வயதுகளை- உறவுகளை- கனவுகளை- எதிர்காலத்தையே தொலைத்தவர்களை வெளியே கொணர்ந்ததை மறக்கமுடியுமா?

போராட்டத்தில் எம்மைப்போன்ற போராளிகள் வெளியே இருந்து சிக்கி சின்னாபின்னப்பட்டு மொத்தத்தில் எல்லாவற்றையும் தொலைத்து நிற்க, எம்மை நம்பி இந்த போராட்டத்தை இடைநடுவில் விட்டு சிறையிருந்து சீரழிந்த நிலையில் 1987-1988ல் வெளியே வந்த இந்த இளைஞர்களுக்கு நாம் போராட்டத்தின் விளைநிலத்தை எதுவென குறிப்பிட முடிந்தது. பீலிக்ஸை போல் ஆயிரமாயிரம் இளைஞர்களின் எதிர்காலமும் சுமையும் சூனியமும்தான். அவர்களின் ஏழைக் குடும்பங்களுக்கும் ஏக்கத்துடனும் விரக்தியுடனும் வாழப் பழக்கியுள்ளோமா?
ஒருபோராட்டத்தின் தீஞ் சுவாலைகள் இவ்வளவு பலி கேட்டதா?……

9. kovai on February 13, 2011 6:33 am

ஜென்னி என்ற பெயர் எப்படி வந்தது?
காதலை அனுமதித்த கழகத்திற்கு தெரியாமலா திடீரென பதிவுத் திருமணம்?
கடைசி நிமிட செல்வன் தப்பிதம், அடுத்த நாள் துப்பரவு தொழிலாளர் வேஷம், அடுத்த இரு நாட்களில் இந்திய விஜயம்,விபர அறிக்கையின் பின் செல்வன் சுமுகமாக நாடு திரும்பல்.
மர்மக் கதையாக…….
அதென்ன திருகோணமலை அம்மாவிற்கு, யாழ்ப்பாண அம்மம்மா.
//…ஆனாலும் அந்த முகாம்களின் வரை படங்களை தனது சாதுரியத்தால் வேறு தனிப்பட்ட நபர்கள் மூலம் பெற்றுக் கொண்டு வந்தார்…// தற்போதைய மருத்துவ கலாநிதியின் சாதுர்யம், என்னமோ குழப்பமாக படுகிறது.
நான் முடிவை எடுத்தாலென்ன, அறியப்பட்டவர்களை உட்கார வைச்சு எடுத்தாலென்ன, முடிவு என்பது ஒன்றுதானே. இதற்கெல்லாம் விளக்கம் கொடுத்தால், ஒளிவுமறைவு வெளிக்கிட்டும்.
அரச கட்டமைப்பை அப்படியே பிரதி எடுத்து, மகளிர் அமைப்பு கட்டியது அரச மரத்தைச் சுற்றிய கதைதான். தெரிந்ததை தெளிவாய் எழுதினால், தெரியாததில் கவனம் செலுத்தி நாம் வாசிக்கலாம்.

10. prof on February 13, 2011 9:19 am

ஜென்னி, கருணா என அறியப்பட்ட ஜெயச்சந்திரன் ரஜனி ஆகிய நான், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தில் 1987 ஆண்டு வரை போராளியாய் இருந்தேன். அதற்கு பின் இதுவரை பிரான்ஸில் மட்டுப்படுத்தப்பட்ட கலை, இலக்கிய, அரசியல் செயற்பாடுகளுடன் வாழ்கிறேன்./ நிலா உங்களின் முதல் பந்தியே தடக்கிறது.

உங்களின் (நிலா) கட்டுரை என்னை சந்தேகிக்க வைத்தது.
1.இந்த கட்டுரை எழுதுபவர் ஈஎன்டிஎல்எவ் அமைப்புடன் நல்ல தொடர்பில் இருப்பவர் என்பது
2. இந்த கட்டுரையை எழுதியவர் ஒன்றில் ராம்ராஜ் அல்லது ஜென்னி என்பதை மனதளவில் எண்ணிக்கொண்டேன்.

இதை உறுதிப்படுத்திய துணிச்சலுக்கு முதலில் ஒரு பலே.

மற்றப்படி உங்களின் ஈஎன்டிஎல்எவ் உறுப்புரிமையை ஆரம்ப பந்தியிலேயே மறைத்துள்ளீர்கள். எப்படி உண்மையை எழுதப் போகிறீர்கள்?

11. தோஸ்து on February 13, 2011 9:58 am

// தெல்லிப்பளை - கட்டுவன் ராணுவ முகாம் என்பன யாராலும் உள் நுழைய முடியாத பிரதேசமாக இருக்கும். ஆனாலும் அந்த முகாம்களின் வரை படங்களை தனது சாதுரியத்தால் வேறு தனிப்பட்ட நபர்கள் மூலம் பெற்றுக் கொண்டு வந்தார்.//
இந்த மிகைப்படுத்தலின் தேவையென்ன?

12. பல்லி on February 13, 2011 11:21 am

//மர்மக் கதையாக…….//
ஜயோ கோவை போராட்டமான சதிராட்டமே மர்மமானதுதானே, ஏன் ஜயரின்

பாகங்களை படித்தால் பிரிந்த குடும்பம் கூட பயத்தால் ஒன்னுசேரும் அளவுக்கு மர்மமாய் இருந்துதே, நீங்க படிக்கவில்லையா??

:://மகளிர் அமைப்பு கட்டியது அரச மரத்தைச் சுற்றிய கதைதான்.//
அவர் பற்றிய துறை பற்றி எழுதுகிறார் என நினைக்கிரேன்,

//தெரிந்ததை தெளிவாய் எழுதினால், தெரியாததில் கவனம் செலுத்தி நாம் வாசிக்கலாம்.//
உங்களுக்கு தெரிந்ததை நீங்கள் கேட்டால் நாமும் கேட்டு பார்க்கலாம்; கேழுங்க கோவை உங்களுக்கு என்ன வேண்டுமோ அதை கேழுங்க;

13. ajeevan on February 13, 2011 2:14 pm

ஜென்னி, இங்கே தன்னைச் சுற்றி நடந்தவற்றை எழுதுவதே சிறந்தது. அடுத்தவரிடம் கேட்டு எழுதும் போது பல தவறுகள் இடம் பெற வாய்ப்புண்டு. இது நிலாவின் எழுத்தில் தெரிந்தது. அதை இங்கே செய்ய வேண்டாம். இயக்கத்தில் எந்த ஒரு பொறுப்பில் இருந்தாலும்; இல்லாவிட்டாலும் அங்கே நடப்பவை அனைத்தும் அனைவருக்கும் தெரிய நியாயமில்லை.

நாலு பேர் ஒரு இடத்துக்கு போய்; மூவரை வெளியில் நிறுத்தி விட்டு உள்ளே ஏதோ பேசி விட்டு வெளியே வந்தால்; வெளியில் இருப்போருக்கு உள்ளே நடந்தது என்ன என்பது தெரியாது. அவர் இதுதான் நடந்தது என சொன்னாலும் அதில் முழு உண்மை தன்மை இருப்பதில்லை. இதை அனுபவத்தில் கண்டுள்ளேன். அனைவரும் கண்டிருப்பார்கள். உங்கள் பகுதியை எழுதிக் கொண்டு போகும் போது; அது சம்பந்தப்பட்டவர் சில கருத்துகளை முன் வைக்கலாம். அது பல தெளிவுகளை கொடுக்கும்.

ஜென்னி, இன்று இருக்கும் நிலைக்கும் அன்று இருந்த நிலைக்கும் மன நிலையிலும்; அரசியல் பார்வையிலும் வேறுபாடுகள் இருக்கும். அன்று இருந்த நிலையில் முன் வைப்பதே சிறப்பு. பின்னர் இன்றைய மன மாற்றத்தை தெளிவுபடுத்தலாம். இது அனைவருக்கும் ஒரு சிறந்த பாடமாக அமையும். இது எனது நம்பிக்கை.

14. jeyarajah on February 13, 2011 8:34 pm

ஜென்னி சொல்லவாற விடயத்தை துக்ளக் சோ மாதிரி யாரும் குழப்ப வேண்டாம். இப்படிக் குழப்புவதால்தான் சொல்லவந்த நேசன் அசோக் மாயா தயாபரன் போன்றவர்கள் மௌனமாகி விடுகிறார்கள். எந்த இயக்கத்துக்குப் பொறுப்பில் இருந்தாலும் நடப்பது யாருக்கும் தெரிய வாய்ப்பில்லை.

காரைநகர் நேவிக்காம்ப் அடிக்கப் போகினம் என்றவுடன் லண்டனில் இருந்து காரைநகர் நேவிக்காம்பில் கொடி பறக்கிறது என்று செய்திவரும். இப்படி எத்தனையோ செய்திகள்.

ஜென்னி பெண் போராளியாய் இருந்தும் சுயவிமர்சனம்மூலம் தன்னை அறிமுகப் படுத்தியதுக்குப் பாராட்டுக்கள். பழைய போராளிகள் மனம்திறந்து உண்மை பேச வெளிக்கிட்டுள்ளார்கள். இது கழகத்தினருக்கு மட்டுமல்ல ஏனையோருக்கும் தொடர வாய்ப்புண்டு. குழப்பாமல் குதர்க்கமில்லாமல் கேள்விகேட்டால் குலன் மாதிரிப் பதிலளிப்பார்கள்.

15. j.jenney on February 13, 2011 11:10 pm

கோவை வணக்கம்!
உங்கள் பல கேள்விகள் நியாயமானதே இதற்கான பதிலை கொடுப்பது எனது கடமை. ஆயினும் எனது பதிலினூடாக பல விடயங்கள் என்னை சுற்றிவரும் போது, பின்பு உங்களைப் போன்றோர் தான் சொல்வீர்கள் ஜென்னி சுயவிமர்சனம் என்ற போர்வையில் சுயவிளம்பரம் தேடுகின்றார் என்று. நிலாவின் கட்டுரையிலும் இதைத்தான் கையாண்டீர்கள் நான் எங்கெங்கோ தேடி இரவுபகலாக பல நாட்டிலுள்ளவர்களின் தொடர்புமூலம் அத்தாட்சிகளுடன் பல உண்மைகளைக் கொண்டுவர நான் யாருக்கோ துதிபாடுவதாக. ஆனால் உங்கள் அனைவரின்

சந்தேகங்களுக்கும் உயிருடன் இருப்போரை சாட்சியாக வைத்து ஆதாரங்களைத் தந்தேன்.

ஆனால் அந்த ஆதாரங்களை ஆராய்ந்து சரிபிழை பார்க்க முற்படாமல் கோஷ்டி கட்டும் அரசியலை நடாத்த முற்படுகின்றீர்கள். நான் சரியோ பிழையோ என் கருத்துக்கு எட்டியபடி என்றும் எனது அரசியலை நகர்த்துபவள். எனக்கோ எனது அரசியலுக்கோ என் பக்க சார்பாக ஆள் பிடிக்க என்றும் முற்பட்டதில்லை. பொது வேலையில் தெளிவுடன் இருக்கும் நான் என்றும் நானாகவே இருப்பேன். அதுபோல் நான் படம்காட்டி எமது அரசியலுக்கு ஆள் சேர்க்க மற்றவர்களும் முட்டாள்கள் இல்லை. எனவே சந்தேகங்களை உள்நோக்கம் இல்லாமல் கேட்டு விடை கண்டபின் பலவிதத்திலும் கொச்சைப்படுத்தாமல் இனியாவது இருந்தால் சரி.

ஒவ்வொருதருக்கும் ஒரு அரசியல் பாதையுள்ளது. அதற்கான களமாக இதை நான் பார்க்கவில்லை. ஆனால் கழகத்தின் வரலாறும் எனது அரசியல் வரலாறும் தவிர்க்க முடியாமல் எனது தனிப்பட்ட வரலாறும் ஒன்றுடன் ஒன்று பின்னி பிணைந்ததாலும் பல் ஆயிரம் பேரினை கடந்து நாம் நகர்வதாலும் அதைத் திரும்பிப் பார்ப்பதாலும் சாட்சிகளும் சம்பவங்களும் சொல்வது தவிர்க்க முடியாததே.

எனது தாயார் பற்றி நான் நிலாவின் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளேன். இங்கு அதன் விபரங்களை தவிர்த்தேன் காரணம் கட்டுரையின் பக்கங்களை கூட்ட விரும்பவில்லை. ஆயினும் சுயவிமர்சனத்தில் எனது பின்னணி சொல்லப்பட வேண்டிவந்ததால் பெயரிடாமல் குறிப்பிட்டேன். இந்த பின்னணி கூட எனது கட்டுரையின் கடைசிப்குதியிலோ அன்றி எமது ஐக்கியபட்ட அரசியலை என்றும் நகர்த்த எனக்கு என்றும் ஒரு பின்னணியுள்ளதை சாட்சிகளோடு சொல்லவே இதைக் குறிப்பிட்டேன். எனினும் உங்கள் பார்வைக்காக சிலவற்றை மீண்டும் சில உரிமையுடன் வெளிப்படுத்துகின்றேன்.

எனது தாயார் திருமலையில் திருமதி.பிலோமினா லோறன்ஸ் என்ற ஒரு தமிழரசு கட்சியின் மிக முக்கியமான பிரதிநிதி 1969 களிலிருந்து ஒரு பிரபலமான அரசியல் மேடைப் பேச்சாளர். திருமலையில் தங்கத்துரை எம்.பி காலம் தொட்டு பின் சம்பந்தர் காலம்வரை திருமலை தமிழரசுக்கட்சி செயற்குழுவின் முடிவெடுக்கும் அங்கத்தினர். இவர்களுடன் மறைந்த ஈழத்துநாதன் (சொர்ணத்தின் அத்தான்), கனடாவிலுள்ள வீரசுப்பிரமணியம் அவர்கள் போன்றோர் முக்கியஸ்தர்கள். ஆனால் பல சந்தர்ப்பங்கள் வந்தும் எந்தக் காலத்திலும் எந்த மேயரோ நகரசபை உறுப்பினரோ போன்ற பதவிகளையும் வகிக்க மறுத்தவர். தமிழர் விடுதலைக் கூட்டணியின் அகில இலங்கை மகளிர் பேரவையின் உபதலைவியாக கடைசி மட்டும் செயற்பட்டவர். இந்த மகளிர் பேரவையின் தலைவி உரும்பிராய் தியாகி சிவகுமாரின் தாயார் திருமதி அன்னலட்சுமி பொன்னுத்துரை அவர்களும், செயலாளராக திருமதி. மங்கையற்கரசி அமிர்தலிங்கம் அவர்களும் செயற்பட்டனர்.

இந்த வடிவமைப்பின் கொழும்பு கிளை மகளிர் பேரவை செயலாளராகத் தான் ஊர்மிளா அவர்கள் செயற்பட்டார். இதே காலத்தில்தான் கொழும்பு இளைஞர் பேரவைத் தலைவராக ரகுபதிபால சிறீதரனும் செயலாளராக திரு.க. உமாமகேஸ்வரனும் செயற்பட்டனர். (1973-1974 பகுதிகளில் என்று நினைக்கின்றேன்) இந்த காலகட்டத்தில் அம்மாவினுடான இவர்களின் (எனது 13-14 வயது அரசியல் பார்வையில்) நட்பு திருமலைக்கு யார் வந்தாலும் எங்கள் வீட்டை மையப்படுத்திய அரசியலும் நட்பாகத் தான் இருந்தது. இது சேனாதி அண்ணா, சம்பந்தர் அவர்களுட்பட்டவர்களுக்கு நன்கு தெரியும். அதுபோல் பின்னாளில் வந்த வரதர், பிரான்ஸிஸ் (கி.பி. அரவிந்தன்) புஸ்பராஜா மற்றும் சந்தியார் போன்ற பல முக்கிய இளைஞர்களுக்கும் எமது வீடு ஒரு நிரந்தர தளமாகவே இருந்தது.

பிற்பட்ட 1978-1979களில் கூட்டணி அரசியலில் இளைஞர்களுக்கும் பொதுவாக தமிழ் மக்களுக்கும் ஏற்பட்ட அவநம்பிக்கையின் நிமித்தம் தேர்தலுக்கப்பாலும் அரசியல் நகர்த்தப்பட வேண்டிய சூழல் ஏற்பட்ட நிலையிலும் ஒரு பகுதி ஆயுதப் போராட்டமாகவும் ஒரு பகுதி மக்கள் வேலைத்திட்டமாகவும் பரிணமித்தது. இந்நிலையில் எனது திருமலை நகர கிறிஸ்தவ பேராலய நேர்முகப்பரீட்சை மூலம் காந்தீயத்திற்குள் 1979ல் வந்தேன். அதன்பின் 1980 தொடக்கத்தில் சந்தியார் பழைய

அரசியல் தொடர்பு மூலம் எனது தாயாரை அணுகினார். இதன் போது டொக்டர் ராஜசுந்தரம், டேவிட்ஐயா, சேலிகந்தப்பா, உட்பட்ட பலர் வீட்டிற்கு வந்த நிலையில் தமது சமூக மட்டத்திலான வேலைத்திட்டத்தை தெளிவுபடுத்தி அன்றே திருகோணமலை மாவட்டம் அனைத்திற்குமான காந்தீய மேற்பார்வையாளராக எனது தாயாரை நியமித்தனர். ஏற்கனவே நான் 1979ல் காந்தீய குருகுலப்பயிற்சியில் சந்ததி அண்ணாவை கண்டதில் இதை எனது தாயாரிடம் வந்து சொல்லியிருந்ததில் இதில் இவர்களும் வீட்டிற்கு வந்ததில் எல்லாம் புரிந்தது. அன்று தான் திருமலைக்கான காந்தீய அடித்தளம் உறுதியாக்கப்பட்டது.

பின்னாளில் சந்ததியார் தீவிரமான இளைஞர் என்று சில மாதங்களில் பார்த்தனை முதல் முதலில் காந்தீயத்திற்குள் கொணர்ந்தார். இந்த பார்த்தன் மூலம் காந்தியத்திற்குள் ஜெயகாந்தன், ராதாகிருஸ்ணன், பிரதீபன் போன்ற பல இளைஞர்கள் உள்வாங்கப்பட்டனர். ஜான் மாஸ்ரர் என்றும் பெரிதாக தன்னை காந்தீயத்திற்குள் அடையாளம் காட்டாமல் சந்ததியார், பார்த்தன் போன்றோருடன் வெளி அரசியலிலோ அன்றி பண்ணைகளினூடோ இன்னொரு பக்கத்தில் செயற்பட்டனர். (காந்தியத்தின் அனைத்து செயற்பாடுகளையும் நான் பிரிதொரு ஆவணப்பதிவாக கொண்டு வர உள்ளேன். அதில் மேலதிக விடயங்கள் வைக்கப்படும்)

ஜென்னி என்னும் எனது பெயர்: காந்தீயத்திற்குள்ளும் பின் கழகத்திற்குள்ளும் மொத்தமாக நான்கு வருடங்கள் நானும் ஜெயாவும் முதலில் நல்ல நண்பராகவும் பின் காதலராகவும் பழகியிருந்தோம். இந்நிலையில் சில செயற்பாடுகளுக்கு பொதுவில் எல்லோருக்கும் ஒரு புனைபெயர் தேவைப்பட்டது. நான் 1983 ஒக்டோபர் வரை வீட்டிலிருந்து செயற்பட்டாலும் வவுனியாவை தலைமையகமாக கொண்டு காந்திய வேலை உட்பட பல வேலைத்திட்டம் நடந்தது. அப்போது வவுனியாவை மையப்படுத்தி ஒரு அரசியல் கையெழுத்துப்பிரதியும் வெளியானது. அதில் எனது கவிதை ஒன்று பிரசுரமாக இருந்த நேரம் அதற்காக நான் முதல் முதல் (1982ல் என நினைக்கின்றேன்) புனைபெயர் பாவிக்க வேண்டி ஏற்பட்டது. எனது தாயாருக்கு கூட தெரியாமல். இந் நேரம் நாம் எல்லோரும் தீவிரமாக மாக்சிய புத்தகங்களை படிப்பவர்களாக இருந்தோம். படித்ததற்கும் அப்பால் எதிர்கால அரசியல் நடவடிக்கைகளையும் மேற்கொள்ள தொடங்கியிருந்தோம். இந்நிலையில் எனக்கான புனைபெயரை ஜெயாவிடமே கேட்டிருந்தேன். அவரின் அரசியல் எதிர்பார்ப்பிற்கு ஒத்ததுபோல் அவரால் இந்தப் பெயர் எனக்கு தரப்பட்டது. ஆயினும் ரஜனி என்பது எல்லோருக்கும் அறிமுகமானதால் அந்தக் கவிதைக்காக மட்டும் ஜென்னி என்ற பெயரை பாவித்து விட்டு பின் அவர் வைத்த பெயரை ஞாபகத்தில் காத்திருந்தேன். நான் 1984 முற்பகுதியில் ரஜனி என்ற பெயரில அரசால் தீவிரமாக தேடப்பட்டு தப்பி வந்ததால் யாழ்ப்பாணம் வந்ததும் ஜென்னி என்ற பெயரே எம்மவர்க்குள் பதிவானது பின்நாளில் இந்தியா போகும் போது இந்தப் பெயரே நிலையானது.

பின் பயிற்சிகள் முடித்து நியமனத்துடன் நாட்டிற்கு வந்ததும் பாதுகாப்பிற்காக (ஜான் மாஸ்ரரின் அறிவுறுத்தல்களை நான் கைகொண்டதால்) மீண்டும் ஒரு பெயர் மாற்ற வேண்டி ஏற்பட்டது. இதன் போது ஜெயா என்றோ தனக்காக பாவித்த கருணா (இது பொதுப் பெயர் என்பதால்)என்ற பெயரை ஜெயாவின் நினைவாக தளத்தில் நான் பாவித்தேன். ஜெயா தனது மனைவி ஒரு போராட்டத்தை தனக்குப் பின்னாலும் சுமக்க வேண்டுமென கனவுகண்டு ஒரு வரலாற்று பெயரை வைத்ததில் என்ன குற்றம் கண்டீர்கள்? எமது காதலால் நாமிருவரும் என்றும் எந்த விமர்சனத்திற்கும் உட்படாதபடி மிக கவனமாகத்தான் நடந்தோம். அதேபோல் எமது காதலும் மத்திய குழுவில் சில காரணகாரியங்களுக்காக ஏற்கனவே வைக்கப்பட்டிருந்தது. ஆயினும் இந்தக் கட்டுரையின் முன்பக்கமே ஒரு தலையங்கத்திற்கு கீழே எமது காதலைப் பற்றியும் பதிவுத்திருமணம் பற்றியும் குறிப்பட்டிருந்தோம். அதுபற்றி புரியாவிட்டால் இன்னும் சில தகவல்கள்:

நான் திருமலையில் தேடப்பட்டு மார்ச் 16 மாலை யாழ்நகர் வந்தேன் என்னை எமது தோழர் ஒருவர் (அசோக் ஆக இருக்கலாம் ஞாபகம் வரவில்லை) ரிசிவ் பண்ணி யாழ்பல்கலைக்கழக கழகத் தோழிகளாக இருந்த நந்தா, வனிதாவிடம் விட்டு விட்டு யாழ்நகரில் நின்ற பார்த்தனுக்கு செய்தியை அனுப்பினார்கள். அன்று மாலை பார்த்தன் வந்து சந்தித்து விட்டு அடுத்த கட்டம் என்ன செய்வதென முடிவெடுத்து முதல்

பயிறசியாளர் வரிசையில் என்னுட்பட சில பேரை பின்தளம் போகச் சொன்னாலும் நானும் அதனையே விரும்பியதால் ஒத்துக்கொண்டேன். ஆயினும் முன்பே எம்மிருவருக்குமான காதல் எமது வீட்டினருக்கு தெரியவந்த போது எனது தாயார் முழுதாக எதிர்த்தார். எனினும் எனது ஏனைய உறவினர் யாழ்நகரிலுள்ள எனது அம்மம்மா உட்பட எல்லோரும் எனது விருப்பத்தை மறுக்கவில்லை. காரணம் எனது பிடிவாதமும் ஜெயாவின் நல்ல குணாம்சமும் எமது அரசியலும் தெரிந்ததே. எனவே நாமிருவரும் தேடப்பட்ட நிலையில் அடுத்தது எதுவும் நடக்கலாம் என்ற நிலையில் வாழ்வோ சாவோ காதலுக்கு அடையாளமாக எமது பதிவுத் திருமணத்தை முடிப்போம். ஆனால் பதிவுத்திருமண கந்தோருக்கு போக முடியாத பாதுகாப்பு பிரச்சனையால் எனது அம்மம்மாவின் வீட்டில் திருமணப்பதிவாளரை (இந்த ஒழுங்குகளை எனது அம்மம்மாவே செய்தார்) கூப்பிட்டு செய்வதாக இருந்தது.

இதற்கான திகதியை மார்ச் 19 என எடுத்து அதற்கு சாட்சியாக வருவது பாலன் என்ற சலீம் (எமது நண்பரும் மத்திய குழு உறுப்பினரும்) என்று முதல் நாளே முடிவெடுத்து அடுத்த நாள் சலீமும் ஜெயாவும் சந்தித்து நேரே அம்மம்மா வீட்டிற்கு காலை ஒன்பது மணிக்கு வருவதாக இருந்தது. நானும் அங்கே சென்று காத்திருந்து மதியம் வரை ஜெயா வராததால் பதிவாளரும் திரும்பிச் சென்றுவிட்டார். பின் மதியத்திற்கு பிறகு ஜெயாவந்தார். தானும் சலீம் இரவு சந்தித்து விட்டு வேறு வேறிடங்களில் படுக்கச் சென்ற இடத்தில் அதிகாலை வேளையில் சலீம் படுத்திருந்த இடத்தில் ராணுவம் சுற்றிவளைத்ததில் சலீம் தான் உயிருடன் பிடிபடக்கூடாதென்ற வைராக்கியத்தில் ஒரு போத்தலை உடைத்து தனக்குத்தானே வயிற்றில் குற்றிக்கொண்டு ஓடிக் கொண்டிருந்தார் ஆயினும் சுற்றிவளைத்த ராணுவம் அவரை ரத்தவெள்ளத்தில் கைதுசெய்து சென்றது. இதனை அறிந்த ஜெயா (தள ராணுவப் பொறுப்பாளராக இருந்ததால்) உடனே முடிவெடுத்து எப்படியும் சலீமை அடையாளம் காட்ட வெளியே கொண்டு வருவார்கள் ராணுவத்தை தாக்கி சலீமை காப்பாற்ற வேண்டுமென முடிவெடுத்து சில ஆயத்தங்களுடன் ராணுவம் வரக்கூடிய பகுதிகளில் காத்திருந்தனர். இப்படி எதுவும் நினைத்தபடி சாதமாக அமையாததால் ஜெயா தாமதமாக வந்து விடயத்தை சொன்னார்.

பின் நானும் தேடப்பட்ட நிலையில் இங்கிருப்பது தொடர்ந்து ஆபத்தென்ற நிலையில் யோசித்தோம். ஏனெனில் தொடங்கிய பதிவுத்திருமண அலுவலையும் முடிக்க வேண்டிய குடும்ப நீர்ப்பந்தத்தில் இருந்தோம். எதற்கும் அடுத்த நாள் (சத்தியமூர்த்தியா? கொக்கு சிவாவா என எனக்கு ஞாபகம் இல்லை) மற்றைய தனது நண்பரை சாட்சியாக வைத்து பதிவுதிருமணத்தை முடிப்போம் என ஜெயா முடிவெடுத்ததால் (இந்த எமது அவசர பதிவுதிருமணம் பற்றி குறிப்பிட்ட முக்கிய தமது சகாக்களுக்கு தெரிவித்து அவர்களில் முக்கியமானவர் ஒருவரின் சாட்சியோடு நடப்பதாகவே முடிவாகியிருந்தது. அதன்படி அடுத்தநாள் காலைக்கிடையில் மற்றைய நண்பரும் ராணுவத்தின் சுற்றிவளைப்பில் பிடிபட்டிருந்தார். இந்த செய்தியோடும் தாமதமாக ஜெயா வந்ததாலும் பதிவாளர் காத்திருந்த நேரத்திற்குள் வந்ததால் மிக பதட்டமான சூழலில் அவசரமாக பதிவுத்திருமணம் நடந்தது.

பதிவுத்திருமணம் முடிந்த கையோடு சரியாக சாப்பிடவும் முடியாத நிலையில் ஜெயா உடனே புறப்பட்டுச் சென்றார். அன்றிரவு கொக்குவிலில் அனைத்து முக்கிய பொறுப்பாளர்களையும் கூட்டி அடுத்த கட்ட நடவடிக்கைகள் பற்றி உரையாடிய வேளையில் அங்கும் பாதுகாப்பு படை சுற்றிவளைத்ததில் மற்றைய மத்திய குழு உறுப்பினர்களை தப்ப வைத்து தான் வைத்திருந்த பிஸ்டலின் பாதுகாப்புடன் அவர்களை பாதுகாப்பாக அனுப்பிவிட்டு வேலிகள் முட்கம்பிகள் கிழித்த ரத்தயக்காயத்துடன் இரவு பன்னிரண்டு மணிக்கும் அப்பால் அம்மம்மா வீட்டிற்கு வந்து சேர்ந்தார். இந்த இவரின் இரத்தக் காயத்துடனான வரவு எனது உறவினருக்கு எப்படியிருந்திருக்கும்? என்னதான் நானும் என்னை ஒரு போராளியாக வளர்த்துக்கொண்டாலும், நானும் ஒரு பெண், எமது திருமண முதல்நாள் இப்படித்தான் ஆரம்பித்தது.

எனவே மார்ச் 20 கொக்குவிலில் ஜெயா பல பேரை தப்பவைத்த விடயம் உட்பட இன்றும் இந்த நாட்களுடன் சம்பந்தப்பட்டவர்கள் உயிருடன் இருக்கின்றார்கள். மற்றும் கழகத்தில் எமது விடுதலைக்கு இடைஞ்சல் இல்லாமலும் வீண் விமர்சனத்திற்கு

உட்படாமலும் காதல் என்றும் அங்கீகரிக்கப்பட்டதென்பது யாவரும் அறிந்ததே. எனவே கோவை எதனை மனதில் வைத்து எந்த பிழைபிடிக்க சராசரி மனித உணர்வுகளையே கொச்சைப்படுத்தி கேள்விகளை தேடிக் கொண்டு வருகின்றீகள்? ஆனால் உங்கள் எந்தக் கேள்விக்கும் என்னால் பதில் சொல்ல முடியும் பல ஆதாரங்களோடு, பலநிகழ்வுகள் திகதிகளோடு. ஏனெனில் நான் என்றும் விடுதலைக்குள் எனது வாழ்க்கையையும் எனது உணர்வுகள் இழப்புக்களை ஐக்கியப்படுத்திக் கொண்டவள்!

16. j.jenney on February 13, 2011 11:15 pm

கோவை! உங்கள் கேள்வியான செல்வன் பற்றியதானது! நான் முதலே குறிப்பிட்டபடி எனது கட்டுரை இடநெருக்கடி காரணமாக தவிர்க்க முடியாதபடி பகுதிகளாகத்தான் இங்கு வைக்கப்படுகின்றது. எனவே இந்த முதல் பகுதி பின்னால் வரும் பல சம்பவங்களுடன் சம்பந்தப்பட்ட பலரின் அறிமுகமும் அவர்களுடன் எனகக்கிருந்த வேலைத்திட்டங்களும் தொடர்புகளும் தான் எனவே தயவு செய்து இங்கு நாம் யாரும் சினிமா தயாரிப்பில் ஈடுபடவில்லை. 26 அல்லது 27 வருடங்களுக்கு முன் நடந்த சம்பவங்களை உள்ளதை உள்ளபடியே கண்முன்னே கொண்டு வருகின்றேன்.

இறந்தவர்களை சாட்சியாக்க முடியாவிட்டாலும் இறந்தவர்கள் சம்பந்தப்பட்டவர்கள் அல்லது அவர்களோடு பக்கத்தில் நின்றவர்களை சாட்சிகளாக அடையாளம் காட்டியுள்ளேன். செல்வன் கடைசியாக பார்த்தனுடன் கடைசியாக நின்ற இடத்தின் சாட்சியான சம்பந்தப்பட்டவரான அந்தப் பகுதியில் நின்ற ராதாகிருஷ்ணனின் தரவுகளை பெற்று இந்த மாதம் பலவிடயங்களை உறுதிப்படுத்தியுள்ளேன். எனவே எனது இந்தப் பதிவு புர்த்தியாகும் போது உங்கள் பல சந்தேகங்கள் தெளிவாகும்.

நான் தளத்தில் மகளிரமைப்பு பொறுப்பெடுத்தவுடன் தளத்திலுள்ள நேசன் உட்பட்ட மற்றும் மத்திய குழு உறுப்பினர்கள் மற்றும் அங்கு பங்காற்றிக் கொண்டிருந்த மகளிர்களுடன் இணைந்து தான் எமது வெலைத்திட்டத்தை விஸ்தரித்தோம் என்று குறிப்பிட்டேனேயொழிய புதிதாக அரசமரத்தை சுற்றிய எந்தக் கதையையும் கதையளக்கவில்லை. எனவே ஏற்கனவே உள்ள தளத்தில் நிர்வாகக் கட்டமைக்கப்பட்ட செயற்பாட்டு வடிவத்தையே நாமும் அடியொற்றி செயற்பட்டோம். நிர்வாக வசதிக்காக வேலைகளை பங்கிட்டு செய்ய சில வழிமுறைகளை கழகம் பின்பற்றியது தவறென்றீர்களா? கழகத்தில் பிழைகள் நடந்ததென்பதற்காக, எல்லாம், எல்லோரும் பிழை, அரசியல் கட்டமைப்பு பிழை, எல்லோரினதும் உழைப்பு பிழை, அரச கட்டமைப்பை ஒரே இரவில் தூக்கியெறிந்து மாக்கசிய கட்டமைப்பை நடைமுறைப்படுத்தவில்லையென குறைகாண்கின்றீர்களா? படித்த மாக்சியத்தை அந்தந்த சூழலிற்கு பிரதியிட்டுத்தான் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டுமென எம்மவர்கள் அறிந்துதான் திட்டமிட்ட வேலைத்திட்டத்தை நகர்த்தினார்கள். இதில்தவறுகள், பிழைகள், குழிபறிப்புக்கள் அந்தந்த இடத்தில் நடந்ததென்பதற்காக அவற்றை மனச்சுத்தியோடு ஆராய முற்படுகின்றோமே ஒழிய இன்னும் நீங்கள் யார் என்று முகம் காட்ட முடியாமல் நின்று ஒட்டு மொத்தமாக கல்லெறிய தொடர்ந்து விடமுடயுமா? கழகத்தின் தள கட்டுமானத்தின் வேலைத்திட்டத்தில் பிழையென்றால் எந்தக்கட்டுமாணத்தில் நீங்கள் நின்று, பங்காற்றி இந்த கட்டமைப்பு எந்த அரசமரத்தை சுற்றி நின்றதென ஆதாரப்படுத்த முடியுமா?

ஒரு பெண் போராளியின் திறமையை அவரின் துணிச்சலை சொன்னால் கோவைக்கும், தோஸ்க்கும் ஏன் ஆதங்கம் வருகின்றது. அந்த மருத்துவ மாணவி அன்று இந்த ராணுவ முகாம்களில் தனது கல்வி சான்றிதழைக் காட்டியோ அன்றி அது சம்பந்தப்பட்ட ஆதாரங்களுடன் உள்ளே சென்றோ அன்றி அதுபோன்ற வேலைத்திட்டங்களை தனது சாதுரியத்தை பயன்படுத்தி செயற்படுத்தியோ செயற்படுத்தியிருக்கலாம் இப்படி எம்முடன் பங்காற்றியவர்களின் திறமைகளை நாம் வெளிப்படுத்துவது தவறா?அல்லது இப்படி சாதுரியமான பெண் மருத்துவராக இருப்பது தவறா ? எதைச் சொல்ல வருகின்றீகள்? ஒரு சம்பவத்திற்கு முன்னாலும் பின்னாலும் ஒருநபரின் தனிபட்ட குணாம்சமும் அவரின் போக்குகளும் விமர்சனத்திற்கு அப்பால் பார்க்கப்படவேண்டும். எங்கொ எல்லோரும் ஒவ்வொரு இடத்தில் தவறு விடுவது அந்த அனுபவமில்லாத போராட்டத்தில் - தீவிரமான ஓட்டங்களில்- ஓடித்தாpந்த வாழ்க்கையில் - தவிர்க்க முடியாதாகியுள்ளது. ஆனால் கால் நுhற்றாண்டை தாண்டி

நின்ற நிதானித்து நாம் யோசித்து திரும்பிப் பார்க்கும் போது ……

எனவே தயவு செய்து விசால மனத்துடன் எல்லாவற்றையும் பாருங்கள். எங்களை யாரும் இழுத்து பிடித்து கூண்டில் ஏற்றி விசாரிக்கவும் இல்லை. யாரையும் கில்லட்டின் மரணவாசலில் வைத்து குற்றம் சாட்டவும் இல்லை தயவு செய்து சிநேகபுர்வமாக எதையும் அணுகுங்கள்.

நான் கழகத்தில் இருந்து பிரிந்து 1986களில் ஈ.என்.டி.எல்.எப் இல் சேரவில்லை. ஆனால் இன்று கடந்த ஐந்தாறு வருடமாக ஈ.என்.டி.எல.எப் அரசியலுடன் என்னை அடையாளப்படுத்தியுள்ளேன். இதன் விபரம் வரிசைக் கிரமமாக எனது கட்டுரையின் கடைசி பகுதியில் தெறிவுபடுத்தியுள்ளேன். இதைத்தான் நான் ஆரம்பத்திலேயே கலை இலக்கிய அரசியல் செயற்பாடுகளுடன் வாழ்கின்றேன். என குறிப்பிட்டேன். எனது தற்போதைய அரசியலை ஆரம்பத்தி லேயே சுட்டிகாட்டினால் நான் எதோ ஈ.என்டி.எல.எப் க்கு ஆதரவுதேட முனைகின்றீர்கள் என்றும் சொல்வீகள். எனவே இவற்றிக்கெல்லாம் முகங்கொடுக்கத் துணிந்துதானே பழைய சம்பவங்களையெல்லாம் மீட்டெடுத்து மிக நிதானமாக செயற்படுகின்றேன். தயவு செய்து முடிந்தால் சொந்த முகத்தோடு வந்தீர்களானால் நாம் நிறையவே மனம் விட்டு பேசலாம் அதை விட்டு வரிக்கு வரி எதையோ தேடுவது ஏன்?

17. ரூபன் on February 14, 2011 12:47 am

ஜென்னி, தாங்கள் சற்றுக் கோபப்படுவது, அல்லது உணர்ச்சிவசப்படுவது போலத் தெரிகிறது. (ஒரு வராலாற்று ஆசிரியனுக்கு இது தவிர்க்கப்பட வேண்டியது!?)

'தோஸ்து' யாரென்று எனக்குத் தெரியாது. தோஸ்ட்டு என்று நான் ஒரு காலத்தில் கவிதைகள் எழுதியதுண்டு (சுவடுகளில்). இந்த 'ட்'டன்னா, 'டு' னாவுக்கும் - 'து' - வுக்கும் இடையே ஒரு மல்யுத்தம் புரியமுடியாது. இது ஒருபுறம் இருந்தாலும், மேற்படி 'தோஸ்து'வின் கேள்வி, நியாயமானது!

1. தெல்லிப்பளை - கட்டுவன்னில் இராணுவமுகாம் இருந்ததில்லை!
2. நீங்கள் சொல்லும் காலத்தில், குருநகர் இராணுவ முகாமும் -இரண்டாவது தடவையாக- அழிக்கப்பட்டு இருந்ததாகவும் நினைவு. இது சரியான (வரலாற்றுத்) தகவலாக என்னால் உறுதிப்படுத்த முடியவில்லை.

ஆனால், சுழிபுரம் படுகொலைக்கு முன், குருநகர் இராணுவமுகாம் அழிக்கப்பட்டதாகவே கருதுகிறேன். சரியாகத் தெரியவில்லை. தேடிப்பார்க்கவும்.
ரூபன்- 14 02 11

18. தோஸ்து on February 14, 2011 8:59 am

நன்றி ரூபன். இதை நான் சொல்லியிருந்தால் விதாண்டவாதமாகத்தான் பார்க்கப்பட்டிருக்கும்.
1984களில் பலாலி விமான ஒடுதளத்தில் பறப்பிற்கு தயாரான அவ்ரோ ரக விமானம்மீது புலிகளால் ஆர்பிஜீ தாக்குதல் நடத்தப்பட்டது. அது வெற்றியளிக்கவில்லை. அதன் பின் விமான ஒடுதளவளைவிற்கு (தெற்கு புறமாக) நேரெதிராயிருந்த (அச்சுவேலி-தெல்லிப்பளை வீதியை கடந்திருந்த) கற்பிணி மற்றும் தாய்-சேய் திரிபோசா தடுப்பூசி போடும் ஒரு கட்டிடத்தில் மினிமுகாம்/ ஒரு பெரிய காவலரண் அமைந்திருந்தது. 1984 1985 காலப்பகுதிகளில் அவ்வீதி அருகிலிருந்த கிறேசர் இந்துமயானம் பாவனையிலிருந்தது. ஆடுகள் மாடுகள் மேய்போர் சர்வசாதரணமா அந்த பகுதியில் நடமாடினார்கள். இதைவிட கட்டுவனிலோ தெல்லிப்பளையிலோ 1984 1985 காலப்பகுதிகளில் ஆட்கள் நடமாட முடியாதளவிற்கு கெடுபிடியுடன் இராணுவ முகாமிருக்கவில்லை.
1984களில் பலாலி விமானப்படைத்தளத்தின் முழுமையான வரைபடம் புளொட்டின் கையிலிருந்தது.
நான் அடுத்தவரின் திறமைக்கு எப்பவும் மதிப்பளிப்பவன். அதிலும் புளட்டில் அதிபுத்திசாலிகள் நெஞ்சுரமிக்கவர்கள் போராளிகளாய் இருந்ததை யாரும் மறுக்கவில்லை.

19. nanee on February 14, 2011 12:55 pm

ஜென்னி.
கட்டுரை எழுத தொடங்கிவிட்டு பின்னர் அதை கேள்விபதில் மாதிரி ஆக்கிவிடாதீர்கள். எழுதத் தொடங்கியதை முற்றுமுழுதாக எழுதுங்கள். பின்னோட்டங்களுக்கு எழுதிமுடிந்ததும் பதில் அளிக்கலாம். ஏனெனில் நீங்கள் எழுதவந்த விடயம் தொடர்பற்றதாகவும், திசை திரும்பவும் தான் சாத்தியமுண்டு.
உண்மையாகவும் நேர்மையாகவும் உங்களுக்கு தெரிந்ததை எழுதுங்கள். வாசிக்க பலர் ஆர்வமாக உள்ளோம்.

20. ajeevan on February 14, 2011 2:14 pm

// கட்டுரை எழுத தொடங்கிவிட்டு பின்னர் அதை கேள்விபதில் மாதிரி ஆக்கிவிடாதீர்கள். எழுதத் தொடங்கியதை முற்றுமுழுதாக எழுதுங்கள். பின்னோட்டங்களுக்கு எழுதிமுடிந்ததும் பதில் அளிக்கலாம். ஏனெனில் நீங்கள் எழுதவந்த விடயம் தொடர்பற்றதாகவும், திசை திரும்பவும் தான் சாத்தியமுண்டு. - nanee //

இது அநேகமாக நடைபெறும் சாத்தியம் உண்டு. கேள்வி பதில்களைத் தவிர்த்து விட்டு ஜென்னி சார்ந்த விடயங்களை எழுதுவதே சரியானது. அதை யாராவது சுயபுராணம் என்றாலும் அதை கருத்தில் கொள்ளத் தேவையில்லை. ஜென்னி நடந்து வந்த பாதையாக ……… போராட்டத்தை நோக்கி தடம் பதித்ததிலிருந்து தடம் புரண்டது வரை எழுதுங்கள்.

ஜென்னியின் எழுத்து வீச்சு அருமையாக இருக்கிறது. யாரும் இப்படி எழுதியதே இல்லை. அவர் செய்தார். இவர் செய்தார் எனத்தான் எழுதியிருக்கிறார்கள். தாம் என்ன செய்தார்கள் என எழுதியதில்லை. அப்படி வரும் தவறுகளுக்கு மற்றவர்களை கை காட்டி விட்டு தன்னை பரிசுத்தவான்களாக காட்டியிருப்பார்கள். சிலரது கேள்விகள்; கேள்விகளாக இல்லாமல் தமக்குத் தெரிந்தவற்றை சேர்க்க கரம் கொடுத்தால்; அது மேலும் தகவல்களை சேர்க்க உதவும்.

21. vetrichelvan on February 14, 2011 4:37 pm

கழகத்தில் தளத்தில் நடந்த சம்பவங்கள் முழுமையாக யாருக்கும் தெரியாது. முப்பது வருடங்களின் பின்பு தோழர் ஜென்னி இன் தொடர்முலம் ஓரளவு அறிய முடிகிறது. அஜீவன், nanee எழுதியது போல், தொடரை குழப்பம் செய்யாதீர்கள். தொடர் முடிந்தபின்பு விளக்கங்களை கேளுங்கள்.

22. kovai on February 14, 2011 6:19 pm

என் கேள்வி, எழுதிய பகுதியைச் சார்ந்தது. சாட்சியம் என்கிற சங்கிலித் (சந்ததி அடைவு வைச்ச ஆனைக்கோட்டைச் சங்கிலி) தொடர் தேசம்னேட்டில் இருப்பதாக, எழுதுனரும் ஒப்புக் கொண்டுருக்கிறார். இதில் நான் மட்டும் குழப்புவதாக, யாரும் கலவரப்படத் தேவையில்லை.
"….கேள்விகள் நியாயமானதே" என்று தொடக்கி "…..மனித உணர்வுகளையே கொச்சைப்படுத்தி கேள்விகளை தேடிக் கொண்டு வருகின்றீகள்?" என அங்கலாய்க்கிற எழுதினர், அதற்கு மேலாகப் போய் "….நீங்கள் யார் என்று முகம் காட்ட முடியாமல் நின்று ஒட்டு மொத்தமாக கல்லெறிய தொடர்ந்து விடமுடியுமா?" என்கிறார்.

"….இந்த கடைசிக்காலங்களில் 50தைத்தாண்டிய நிலையிலும் இந்த நேரம் கண்விளித்து துதிபாடி இன்னும் இன்னும் எந்தக் கோட்டையை பிடிக்கப் போகின்றோம். இங்கிருக்கும் கடைசிக் காலத்தில் இங்கிருக்கும் பென்சனோடு வாழத்தெரியாமல் இன்னும் இன்னும் அரசியல் அர்பணிப்புக்களா?….." என்ற விரக்தியை வெளிப்படுத்தி விட்டு, .."ஆனால் இன்று கடந்த ஐந்தாறு வருடமாக ஈ.என்.டி.எல.எப் அரசியலுடன் என்னை அடையாளப் படுத்தியுள்ளேன்." விளம்பரப்படுத்துவது, நீண்ட 'யாத்திரா'தான்.

23. பல்லி on February 14, 2011 10:35 pm

//இந்த கடைசிக்காலங்களில் 50தைத்தாண்டிய நிலையிலும் இந்த நேரம் கண்விளித்து துதிபாடி இன்னும் இன்னும் எந்தக் கோட்டையை பிடிக்கப் போகின்றோம்..//
கோவை இங்கேதான் விமர்சனமல்ல தான் செய்வது விசர்தனம் என்பதை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

ஒத்துகொள்கிறார்; தாங்களும் ஐயருக்கு துதிபாடியதை நாம் அறிவோம், ஆகவே தாங்கள் ஈழத்து ஆய்வாளரான ஐயரை அன்பாய் ஆதரவு சொல்லி விட்டு இப்போ கழகத்து விமர்சனத்தை தனது சாட்சியாய் சொல்ல வந்தவரை குறுக்கு விசாரனை செய்வது எங்கோ இடிக்குதே,
அஜீவன், நானே; வெற்றி செல்வன் மூவரும் கழக உறுப்பினர்கள் அவர்களே கட்டுரை முடியட்டும் எனதானே பொறுமை காக்கிறார்கள், குழப்பவாதியான (அப்படிதான் இலவசமாய் எனக்கு பட்டம் பலர் தந்துள்ளனர்) பல்லியே அமைதியாய் கேக்கும் போது நீங்க மட்டும் வந்து கிழவனின் சாவுக்கு கிழவி வீட்டிலை வந்து ஒப்பாரி வைக்கிறியள், கட்டுரை முடிய வாங்க விமர்சனம் செய்து பாப்போம்: பிடிச்சா தொடருவோம்; பிடியாவிட்டால் ஒதுங்குவோம்;

24. n.ravi on February 15, 2011 12:57 am

ஜென்னி. பீலிக்ஸ் பற்றிய தகவல்களிற்கு நன்றி. சந்ததியார் என்ற உன்னதமான மனிதனுடன் பழகியிருக்கிறீர்கள். அவரின் மரணத்திற்கு பின்பும் நீங்கள் முகுந்தனின் தலைமையிலான புளொட்டில் இருந்ததற்கான காரணத்தை கூற முடியுமா?

25. தோஸ்து on February 15, 2011 8:23 am

//ஜென்னி சொல்லவாற விடயத்தை துக்ளக் சோ மாதிரி யாரும் குழப்ப வேண்டாம்.//jeyarajah
// ஜென்னி.கட்டுரை எழுத தொடங்கிவிட்டு பின்னர் அதை கேள்விபதில் மாதிரி ஆக்கிவிடாதீர்கள். எழுதத் தொடங்கியதை முற்றுமுழுதாக எழுதுங்கள். பின்னோட்டங்களுக்கு எழுதிமுடிந்ததும் பதில் அளிக்கலாம்.//nanee
// கேள்வி பதில்களைத் தவிர்த்து விட்டு ஜென்னி சார்ந்த விடயங்களை எழுதுவதே சரியானது. //ajeevan
//தொடரை குழப்பம் செய்யாதீர்கள். தொடர் முடிந்தபின்பு விளக்கங்களை கேளுங்கள்.//vetrichelvan
// கட்டுரை முடிய வாங்க விமர்சனம் செய்து பாப்போம்://பல்லி
மேலுள்ள கருத்தை தெரிவித்த அனைவரும் ஜென்னி என்ன சொல்லியுள்ளார் என்பதை கவனியுங்கள். தேசம் நெற்றும் பின்னூட்டத்திற்கான (கேள்விகள் சந்தேகங்கள் விமர்சனங்களிற்கான…)காலஅவகாசத்தை சந்தர்பத்தை அளித்துவிட்டுத்தான் காத்திருக்கிறார்கள். இவை நிறைவு செய்யப்படும் போதே அடுத்த பாகம் வெளிவருமென நான் நம்புகிறேன்.
"…அனைத்து விபரங்களையும் அனைத்து தரவுகளையும் தேசம் இணையதளத்திற்கு என்னால் முடிந்தளவு பெரியதொரு ஆவணமாக ஏற்கனவே கொடுத்துள்ளேன். ஆயினும் ஒரே கட்டுரையில் இதனை கொண்டு வர முடியாதாகையால் சில பகுதிகளாக பிரித்து வெளியிட வேண்டிய நிலையில் தேசம் நிர்வாகம் செயற்படுகின்றது. எனவே ஆரம்பம் முதல் எனது இந்நிலை வரையான அரசியல் சமூக செயற்பாடுகளும் என்னை நோக்கியுள்ள அத்தனை கேள்விகள் - சந்தேகங்களுக்கான ஆதாரத்துடன் கூடிய பதில்கள் -தெளிவுகளுடன் என்னை வெளிப்படுத்தியுள்ளேன். இதில் நீங்கள் குறிப்பிட்ட விடயங்களுக்கான விளக்கங்களும் தற்போது தேசம் நிர்வாகத்தின் கைகளில் உள்ளது. எனவே அவர்கள் பகுதிகளாக (இடப்பற்றாக்குறை காரணமாக) வெளியிடும் பதிவுகளிற்காக சிறிது பொறுத்திருங்கள்…."

26. kovai on February 15, 2011 1:38 pm

நான் எழுதுகிற கருத்துகளை வாசித்து, எழுதுகிற நோக்கத்தை ஊகித்துக் கொள்கிறேன். அதனாலே எழுதுகிறேன். என் தேடல் கதை கேட்பதிலில் அல்ல.
அய்யரின் எழுத்தின் மேலுள்ள விமர்சனங்கள் முதல் பாகத்தின் முதல் கருத்தாளரின் எழுத்தாக ஆரம்பிப்பதைக் காணலாம். அய்யர் எழுதியது "கட்டுச் சாதத்தை" விரித்து வைத்தது மட்டுமே.

Name (required)

Email (required)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்